REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், நந்தன வைகாசி உகூ 8-6-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 46

சாம்பசிவம் அன்...

38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, ...

H. M. V. றேடியோ

H. M. V. கிராமபோன்

H, M. V. றெக்கோட்டுகள்

விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,

38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ அடுத்தமுறை வேறோர் கட்சி ஆட்சிப்பீடத்தில் அமையவேண்டுமென்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்திவைப்பதே எதிர்க் கட்சியினரின் முக்கிய பணியாக இருக்கவேண்டும்.

# ஆட்சிப்பீடத்தில் யூ.என்.பி. கட்சி

## தலைகால் தெரியாது நடந்ததால் வில்லங்கம்!



பொதுத் தேர்தலில் யூ. என். பி. அபேட்சகர்களுக்குப் போதியளவு வெற்றி கிடைத்தபடியால் அக் கட்சியினருக்கே மீண்டும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இம்முறை யூ. என். பி. என்று சொல்லப்படும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 54 - ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. 1947-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் யூ. என். பி. 42 ஸ்தானங்களையே கைப்பற்றியது. ஆகவே, ஒரு சில சுயேச்சையாளரினதும் வேறு கட்சிகளினதும் ஆதரவைப் பெற்றுக் காலஞ்சென்ற பிரதமர் சேனநாயகா அவர்கள் தமது மந்திரிசபையை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால், புதிய பிரதமர் டட்லி சேனநாயகா அவர்கள் ஒரு விதத்தில் அதிஷ்டசாலியானபடியால் அவர்களுக்கு இவ்விதமான கஷ்டம் ஏற்படவில்லை. யூ. என். பி. யுடன் இம்முறை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸும், தொழிற் கட்சியும் தேர்தலுக்கு முன்னதாகவே சேர்ந்துகொண்டபடியால் அக்கட்சிகளின் ஆதரவும் தாராளமாகக் கிடைத்துள்ளது. தவிர, 'மூன்று தலைக்கழுதைகள்' எனச் சொல்லப்படும் சுயேச்சையாளர்களில் அதிகமானோர் அரசாங்கக்கட்சியுடன் சேருவதற்காக யூ. என். பி.க்காரியாலயத்தின் படிகளில் ஏறி இறங்கிவருகின்றனர் எனவும் தெரிகின்றது. இவர்களுள் கிழக்குமாகாணத்தில் யூ. என். பி. அபேட்சகர்களை முறியடித்த சுயேச்சையாளர்களே தீவிரமாக முனைந்து நிற்கின்றனர் என்ற செய்தி கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்களில் அடிபடுவதாக நமது கொழும்பு நிருபர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிற் சுயேச்சையாளரிற் பலரும் சேர்ந்துகொண்டால் நியமன அங்கத்தினர் அறுவருடன் யூ. என். பி. அசைக்க முடியாதவகையில் உரம்பெறுமென்பது தெளிவாகின்றது.

நாட்டு மக்கள் யூ. என். பிக்கு ஆதரவளித்து அவர்களிடம் நாட்டின் தலைவிதியை மீண்டும் ஒப்படைத்திருப்பதால் மக்களுக்கு அக்கட்சியிடம் பரம திருப்தி ஏற்பட்டிருக்கின்றதெனக் கொள்ளலாகாது. புரட்சிகரமான கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட தீவிரவாதிகளிடம் நாடு அகப்பட்டுத் திண்டாடக்கூடாதென்பதற்காகவே யூ. என். பியை வாக்காளப் பெருமக்கள் அதிகமான தொகுதிகளில் ஆதரித்து வெற்றி ஈட்டிக்கொடுத்திருக்கின்றனர். கொம்யூனிஸ்ட்டுகளின் ஆசைவார்த்தைகளை நம்பி அவர்களின் தயவைத் தமிழரசுக்கட்சி நாடிநிற்பதால் அக்கட்சியையும் தமிழ் மக்கள் ஒதுக்கித்தள்ளியிருக்கின்றனர்.

இப்பத்திரிகை கடந்த இருபத்தொரு வருடகாலமாகச் சிங்கள தமிழர் ஒற்றுமைக்காக உழைத்து வருவதுடன் இனவெறிக்குப் பலியாகிவிடக்கூடாதெனவும் வற்புறுத்தி வருகின்றது. சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் பிழையான வழிகளைப் பின்பற்றிச் சுயநலத்துக்காகத் தங்கள் ஆட்டங்களை நடாத்திய சந்தர்ப்பங்களில் எல்லாம் இப் பத்திரிகை அவர்களைக் கண்டிக்கத் தவறியது கிடையாது. இத்தேர்தலின் போதும், "இனவெறிக்குச் சாட்டைகொடுத்துத் தமிழினத்தின் பெருமையைக் காப்பாற்றவேண்டும். அப்படிக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" என ஈழகேசரி 25-5-52 இதழில் எழுதியிருந்தது. அவ்வாறே மானத் தமிழினம் வகுப்பு வாதத்துக்கு உருப்போட்ட கட்சிக்குச் சட்டைகொடுத்துத் தனது பெருமையைக் காப்பாற்றிக்கொண்டது.

யூ. என். பியைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழினத்தைப் பற்றியும் எழுதவேண்டிய அவசியம் எழுந்தபடி

**நமது அரசியல் நிருபர்**

யாற்றுன் இதனை ஞாபகப்படுத்த வேண்டியதாயிற்று.

காலஞ்சென்ற சேனநாயகா அவர்கள் தமது மந்திரி சபையில் மகன் டட்லி அவர்களுக்குப் பதவி அளித்தபோது குடும்ப பட்சபாதம் இடம்பெற்றுவிட்டதாக நாடெங்கும் ஒரே கூக்குரலாக இருந்தது; பெற்றெடுத்த மகனைத் தவிர வேறும் சிலஉறவினரையும் அவர் தமது மந்திரிசபையிற் சேர்த்திருந்தார். அவர் இறந்தபின்னர் தனயன் டட்லியைத் தந்தையின் பதவி சென்றடைந்தது. பிற்கதவாற் சென்று பதவியைப் பெற்றுவிட்டார் என உலகம் பேசிய காரணத்தால் நாட்டுமக்களின் தீர்ப்பைப் பெறவிரும்பிய திரு. டட்லி சேனநாயகா அவர்கள் அவசர அவசரமாகச் சபையைக் கலைத்துத் திடீர்த் தேர்தலுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இன்று அவர் எதிர்பார்த்ததற்கு மேலதிகமாக நாட்டுமக்களின் ஆதரவு யூ. என். பிக்குக் கிடைத்திருக்கின்றது. ஆனால் பிரதமர் டட்லி சேனநாயகா அவர்கள் அமைத்த மந்திரிசபையானது மக்கள் அனைவருக்குந் திருப்தி அளித்திருக்கின்றதெனக் கூற முடியாது. பதினான்குபேர் கொண்ட மந்திரி சபையில் இருவர் தமிழராவர். ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

இந்திய அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் இந்திய மேற்சபை அங்கத்தினருமான டோக்டர் பி. ஆர். அம்பேத்கார் இம் மாதம் 1-ந் திகதி விமானமூலம் நியூயோர்க் நகருக்குப் பிரயாணமானுர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்ததினுல் இவருக்குக் கௌரவச் சட்டத்துறை டோக்டர்ப் பட்டத்தைக் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தினர் வழங்குவார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத் தயாரிப்புக் குழுவின் தலைவராக டோக்டர் அம்பேத்கார் பணியாற்றியமை வாசகர்களுக்குநினைவிருக்கலாம்

### கட்சிப் பலம்

| | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் | கட்சி | 54 |
| ஸ்ரீலங்கா சுதந்தரக் | ,, | 9 |
| சமசமாஜி | ,, | 9 |
| கொம்யூனிஸ்ட் | ,, | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | ,, | 4 |
| தமிழரசு | ,, | 2 |
| குடியரசு | ,, | 1 |
| தொழில் | ,, | 1 |
| சுயேச்சை | ,, | 11* |

*சபைத் தலைவர் உட்பட

# இந்தியர் இடைஞ்சல்

## இலங்கை நீதி வழங்குவதே முறை

தேர்தல்அமளி ஓய்ந்துவிட்டது. இனி மிக முக்கியமான ஒரு விஷயத்திற் பிரதமர் டட்லி சேனநாயகா தமது கவனத்தைச் செலுத்தி நீதி வழங்கவேண்டும். இலங்கை வாழ் இந்தியருக்குப் பிரஜா உரிமை வழங்கவேண்டுமென்பதே அவ் விஷயம். இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினை பற்றிப் பண்டாரவளைப் பழைய பிரதிநிதி திரு. கே. வி. நடராஜா அவர்கள் திரு. எஸ். நடேசன் அவர்களுக்குத் தேர்தல் காலத்தில் எழுதிய கடிதத்திற் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"இந்தியரின் பிரஜாவுரிமை விஷயம் இலங்கை யரசினராலேயே முற்றுக்கப்பட வேண்டும். **இலங்கையைத் தமது சொந்த நாடாக உண்மைப்படி அபேட்சிக்கும் இந்தியர்கள் யாவரும் இலங்கையிற் பிரஜா வுரிமையைப் பெற வேண்டும்.** இந்தியரின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் விஷயத்தில் நான் இதுவரையும் போராடி வந்தேன். இனி மேலும் அப்படிச் செய்வேன்.


"இவ்விஷயம் இலங்கைவாசிகள் எல்லோரையும், சிங்களரையும் தமிழரையும் பொறுத்ததொன்று ............ மிக்க தாராள சிந்தையுடைய தலைவராகும் திரு. டட்லி சேனநாயகா அவர்கள் தேர்தல் அமளி முடிந்தவுடன், இந்தியரின் பிரஜாவுரிமை விஷயத்தை யாவர்க்கும் ஏற்றமுறையில் ஒழுங்கு செய்வாரென நான் திடமாக நம்புகின்றேன். ஆனால் திரு. செல்வநாயகம் போன்றவர்கள் செய்துமுடிக்க வியலாத நிபந்தனைகளை அச்சமயம் புகுத்தாதிருக்க வேண்டும்."

இலங்கையின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள் அனைவரும் இக்கருத்தை ஏற்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இலங்கைவாழ் இந்தியருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதே அரசினரின் முடிவாக இருக்கின்றது. ஆனால் அதனைப்பெறும்விஷயத்தில் சாதாரண இந்தியத் தொழிலாளி படுங் கஷ்டம் இம்மட்டன்று. இந்த வில்லங்கங்களை அரசினர் நீக்கிப் பிரஜாவுரிமை பெறுங் காரியத்தை இலகுவாக்க வேண்டும். இங்கிலாந்தில் பிற நாட்டினர் ஒருவர் ஆறுமாதகாலந்தொடர்ந்து வசிப்பதாயின் அவருக்குப் பிரஜாவுரிமை கிடைக்கின்றது. ஆனால் இலங்கையிற் பிறந்து வளர்ந்த எத்தனையோ இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கும் விஷயத்தில் இலங்கை யரசினர் வேண்டாவெறுப்பாகநடந்துகொள்வது உலக தர்மமாகாது. இலங்கை இந்தியத் தலைவர்கள் ஒருசிலர் அரசினரின் நம்பிக்கையைப் பெறுதிருந்தாலுங்கூட இலங்கையில் இலங்கையராக வர விரும்பும் இந்தியருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்கு அரசினர் தயங்கக்கூடாது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)







1. களனித்தொகுதியில் வெற்றி பெற்ற திரு. ஜயவர்த்தன அவர்கள் மீண்டும் நிதிமந்திரியாகப் பதவி வகிக்கின்றுர். 2. மகாராணியின் பிறந்த தினத்தை முன்... திரு. ஜி. ஸி. எஸ். கோரியாவுக்குச் சேர்ப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. 3. அகலவத்தைப் பிரதிநிதி திரு. கன்னங்கரா ஸ்தல ஸ்தாபன மந்திரியாக விளங்கு...

…தங்கள்

# …ாட்டுகின்றோம்

…லங்கையில் நடை… தேர்தற் புயலையும், …ழுமாகாண விபரங்களையும், கொழும்புப்பகுதியில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களையும் கொண்டு வெளியாய 1-6-52 ஈழகேசரி இதழ் ஒரு வரப்பிரசாதமாகவே இருந்தது. காங்கேசன்துறை வட்டுக்கோட்டை, கோப்பாய் முடிவுகள் சொல்லப்பட்டதும் தீர்த்த உற்சவத்தைப் போன்று காட்சியளித்த சனதிரள் ஆரவாரப்பட்டு முடிவுத் தொகைகளையே விழுங்கிவிட்டன. முடிவுசெய்யப்பட்ட பின்பும் பலர் தொகைகளை அறியாது இன்னமட்டு—சனத்திரளை நோக்கி—பொறுமையற்ற சனங்களே! என்று திட்டினர். ஆனால் சில மணி நேரங்களுள் விரிவான முடிவுகளையும் விபரங்களையும் விமர்சனுதிகளுடன் யாவருக்கும் ஈழகேசரி ஈய்ந்தது. உண்மையில் இந்த மூன்று தொகுதிகளையும் பற்றிய தெரிவு முடிவை முதல் முதல் இலங்கையிலே தமிழிற் பிரசுரித்த தனிப் பெரும் பெருமை ஈழகேசரிக்கேயுரியதாகும்; பாராட்டுகின்றோம்; நிற்க.

"இது சுடு தோசை; நல்லது; நீங்கள் உண்ணுங்கள்; ஆனால் அது எனக்கு உடம்புக்குச் சரிவராது" என்ற பிரகாரம் செனேட்டர் நடேசன்—"சமஷ்டி நல்லது, நான் இன்னும் சேரவில்லை—ஆனால் நீங்கள் யாவரும் சேருங்கள் உங்கள் வாக்குகளை அளியுங்கள்"— என்று பிரசாரம் செய்துவிட்டு, "ஓட்டைப் படகுடன் மாயமாக விமானமேறிய வைபவ விரிவும் பிறவும் தந்துதவிய கேசரியைப் பாராட்டாமல் விட முடியாது. சம்பவங்களை அப்படியே படம் பிடித்து எழுதி உதவும் ஈழகேசரியை வாழ்த்துகின்றோம்.

ஆர். ரி. சுப்பிரமணியம்

மீசாலை, 31-5-52.

## பெரிய வெற்றி

இலங்கைப் பொதுத் தேர்தல்பற்றி ஈழகேசரி எழுதிய கட்டுரைகள் மிகவும் சுவையாகவும் விறுவிறுப்பாகவுமிருந்தன. பலர் ஆர்வத்துடன் படித்து மகிழ்ந்தனர். கொழும்பிலும் ஈழகேசரியின் ஸ்திரமான கொள்கைகளைப் பற்றியே பேசிக்கொள்ளுகின்றனர். ஈழகேசரியின் எழுத்துக்கள் யாழ்ப்பாணத்திற் பெரும் வெற்றியை ஆக்கியுள்ளன. தமிழ் அரசுக் கட்சி முறியடிக்கப்படவேண்டுமென நாங்கள் எதிர்பார்த்தோம். திருகோணமலையில் நடைபெறாத காரியம் யாழ்ப்பாணத்திற் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. ஈழகேசரி வாழ்க!

அபிமானி

திருகோணமலை, 2.6-52

## அரசினர் பாடசாலைகளில் நியமனம்

அரசினர் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்றப்பட்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிற் சேவையிலிருக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கு அரசினர் பாடசாலைகளில் நியமனம் மறுக்கப்படுவது ஏன்?

ஆசிரிய கலாசாலைகள் அரசினர் ஆசிரிய கலாசாலைகள் தனிப்பட்ட ஆசிரிய கலாசாலைகள் என இருவகையாகும். தனிப்பட்ட ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்றப்படும் ஆசிரியர்களுக்கு அவ்வக் கலாசாலைகளின் முகாமையின் கீழுள்ள பாடசாலைகளில் நியமனம் கொடுப்பதும் அரசினர் ஆசிரியகலாசாலைகளிற் பயிற்றப்படும் ஆசிரியர்களுக்கு அரசினர் பாடசாலைகளில் நியமனம் கொடுப்பதும் முறையாகும். 1944-ம் ஆண்டுக்கு முன் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பலர் உத்தியோகமற்றிருந்தனர். வித்தியாபகுதியினர் 1946-ம் ஆண்டு தொடக்கம் உத்தியோகமற்ற ஆசிரியர்களின் பெயர்களைப் பதிந்து அரசினர் பாடசாலைகளில் நியமனங்கொடுத்துவந்தனர். சில வருடங்களாக நியமனம் மிக ஒழுங்கான முறையில் நடைபெற்றுவருகிறது. ஆனால் அரசினர் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்றப்பட்ட பல ஆசிரியர்கள் பயிற்சிமுடிந்து பல மாதங்களாகியும் அரசினர் பாடசாலைகளில் நியமனம் கிடையாததால் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளில் நியமனம் பெற்றனர். இவர்களிற் பெரும்பாலானோர் 1946-ம் ஆண்டுக்கு முன் பயிற்சிபெற்றவர்களாவர். சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் உத்தியோகமற்ற …ஆசிரியர்கள் இடாப்பில் தங்… பெயர்களைப் பதிந்து …கமுடியாது எனப் பிர…மிருந்ததால் அரசினர் …ய கலாசாலைகளில் பயிற்றப்பட்டு உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளில் சேவையிலுள்ள ஆசிரியர்கள் பலர் அரசினர்பாடசாலைகளில் நியமனம் பெற முடியாது போயினர். இது யாருடைய பிழை? பயிற்சி முடிந்தும் அரசினர் பாடசாலைகளில் நியமனம் கொடுத்திருப்பின் இவர்கள் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் நியமனம் ஏற்றிருக்கமாட்டார்கள். ஒரு சிலர் அரசினர் பாடசாலைகளில் நியமனம் கொடுக்கப்பட்டும் ஏற்காதிருந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் இப்போ உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளிற்கற்பிக்கின்றனர். இவர்கள் அரசினர் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்சிபெற்ற உரிமையைக்கொண்டு வித்தியாபகுதிக்கு அரசினர் பாடசாலைகளில் நியமனம் தரும்படி கேட்க வித்தியாபகுதியினர் சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு அரசினர் பாடசாலைகளில் நியமனம் கொடுக்கப்படமாட்டாது எனப் பதில் அறிவிக்கின்றனர். இதனாற் பல தகுதியுள்ள ஆசிரியர்களின் சேவைகளை அரசினர் பாடசாலைகள் பெற முடியாதுபோகின்றன. தலைமையாசிரியர் பதவி தகுதி நோக்கி, சேவை நோக்கிக் கொடுக்கப்பட வேண்டுமேயொழிய அரசினர் பாடசாலைகளிற் சேவை செய்வோர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையிற் சேவை செய்வோர் என்ற வித்தியாசம் பாராட்டிக் கொடுப்பது நன்றல்ல. அரசினர் ஆசிரியகலாசாலையிற் பயிற்றப்பட்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையில் 5 வருடத்துக்குமேற் சேவையிலிருக்கும் ஆசிரியர்களுக்கு அரசினர் பாடசாலைகளில் உதவி ஆசிரியர்களாக நியமனம்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்

C C C

கலவைப் பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK, தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4610]

➔ பிள்ளையவர்கள் ஒவ்வோர் நிலையத்திலும் உள்ள புஸ்தகங்களில் எழுதியிருந்த குறிப்புகள் கண்ணைக் கவரும்படி இருந்தன.

# கனகசபைப்பிள்ளை தமிழ்ப்பணி

சென்றவாரத் தொடர்ச்சி

தபால் நிலைய உத்தியோகஸ்தர்களுக்குத் தமது விஜயத்தைப்பற்றிப் பிள்ளை அவர்கள் முன்னதாகவே அறிவித்தவிடத்தும் தேவி பட்டணம் தபால் அதிகாரி கணக்கைச் சரிப்படுத்தியிருக்கவில்லை. 'திருதிரு' என்று விழித்தான். தனது பெண்டு பிள்ளைகளையும் பெற்றோரையும் அழைத்து வந்து, அவர்களுடன் பிள்ளையவர்களின் காலில் விழுந்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினான். பிள்ளையவர்கள் மயங்கினர், ஆலோசித்தார்; மாதக் கடைசி ஆய்விட்டது. தமது பணப் பட்டி இரண்டொரு நாளில் வரும் என்று அறிந்து அதுவரை தேவிபட்டணத்தில் தாமதித்து, அது வந்த பின் சர்க்காருக்குச் சேர வேண்டிய தொகையைத் தாமே கட்டிவிட்டுத் தேவி பட்டணம் தபால் நிலைய அதிபரை மதுரைத் தலைமைத் தபால் நிலையத்துக்கு ஒரு இலிகிதராக மாற்றிவிட்டு மதுரைக்குத் திரும்பினர். இச்செய்தி அதி சீக்கிரத்தில் மாகாணம் முற்றுமே பரவி விட்டது. அப்போது சென்னைப் பிரதம தபால் நிலைய அதிகாரி நிலையத்தில் நமது பிள்ளையவர்களது மருமகன் கே. வைத்தியலிங்கம்பிள்ளை என்பவர் உதவித் தபாற்பகுதி அதிபராகக் கடமையாற்றி வந்தார். அவர் சித்திர புத்திரன் எனப்பெயரெடுத்தவர். "தன் காடு—புறங்காடு" என்பதை அறியாதவர். நிர்த்தாக்ஷண்ணியமாக நீதி செலுத்துபவர்.

அவர், உத்தியோகமுறையில், தேவிபட்டணத்தில் நடந்த விஷயங்களைப்பற்றி ஒரு அறிக்கையனுப்பும்படித் தமது மாமனாரான பிள்ளையவர்களுக்கு உத்தரவு விடுத்தார்.

கனகசபையாரும், உள்ளதை உள்ளபடியுரைத்து "ஒரு குடியைக் கெடுப்பதினும் அதனைக் கரையேற்றுவதே மேல் என நினைத்துத்தான், தனது கடமையை யாற்றியதாக அறிவித்தார்". அவரை நாடே புகழ்ந்தது.

பிள்ளையவர்கள் மதுரையிலிருந்தபொழுது, சென்னையிலிருந்த அவரது அருமைக் குழந்தை யொன்று காலஞ் சென்றுவிட்டதாக அவருக்குத் தந்தி வந்தது. அச்சமயம், அவர் ஒரு 'தபால் நிலைய மோசடி வழக்கு' விசாரித்துக்கொண்டிருந்தார்.

தந்தியைப் பிரித்துப் பார்த்து விஷயமறிந்து, பதட்டமோ, துக்கமோ பாராட்டாமல், தமது கருமத்தை முடித்தபின்னரே சென்னைக்குச் சென்று, தமது குழந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செலுத்தினர். [இச்சம்பவம் பரிசோதகர்: திரு. ஜி. சுப்புஸ்வாமி ஐயரால் எனக்குச் சொல்லப்பட்டது.]

* * *

பிள்ளையவர்கள் சென்னையில் இருக்கையில், அவரிடம் மலையாளம் ஜில்லாவிற் பரிசோதகர் கடமையாற்றிவந்த திரு. கண்ணன் என்பவர், அவரைக் காணச்சென்றார், அச்சமயம் பிள்ளையவர்கள் ஸ்நான அறையில் நீராடிக் கொண்டிருந்தார். தமது நண்பர் வந்துள்ளாரென்பதை அறிந்த கணமே, அவர், ஈர வஸ்திரமணிந்தபடியே, ஸ்நான அறையை விட்டு வந்து ஸ்ரீ கண்ணனைக் கட்டியணைத்துக்கொண்டு, யோகக்ஷேமம் விசாரித்து மலையாளப் பகுதியிலிருந்த தமது பழைய

எஸ்.ஆர். அனந்தநாராயணன்

நண்பர்களைப் பற்றி நெடுநேரம் விசாரித்துவிட்டுப் பின், கண்ணன் அவர்கள் சென்னைக்கு வந்த காரியத்தையும் அறிந்து அதைச் செவ்வனே நிறைவேற்றித் தந்தார். இவ்விஷயத்தைக் கண்ணன் பரிசோதகரிடமிருந்தே நான் அறிந்தேன்.

* * *

இவர் உதவித் தபாற்பகுதி அதிபராக மாற்றம் பெற்றுச் சென்றபொழுது, இவருக்கு முன் அப் பதவியிலிருந்தவர் கவனக்குறைவாலும், மனத்தளர்ச்சியினாலும், பலவீனத்தினாலும், காரியங்களைக்கவனியாமல், அலுவல்களை மலைபோல் குவித்தனர். பிள்ளையவர்கள் இரவு பகலாக உழைத்து, அவ்விஷயங்களுக்குப் புத்துயிரளித்து, அவற்றைச் சீராக்கி ஒழுங்குபடுத்தினர்.

1905-ல் சென்னையிலிருந்த தபால் அதிகாரிகள் கோயமுத்தூர்ப் பிரிவை ஒழித்துவிட்டபொழுது கோயமுத்தூரிலிருந்த என்னை, மதுரைக்கு மாற்றினர். அப்போது எனது சம்பளம் மிகச் சொற்பமாகவிருந்ததாலும், எனது தந்தையாரின் வருவாய் மிகக்குறைவாகவும் எனது தம்பிமார் மூவர் பள்ளிக்கூடங்களில் படித்துவந்ததாலும் என்னால் மதுரைக்குச் செல்ல இயலவில்லை. இதனை நான் அதிகாரிகளுக்கு அறிவிக்க, அவர்கள் புதிய பிரிவான கள்ளிக்கோட்டையிலேயே இருந்து வருமாறு அநுமதித்தனர். அவ்வாறு கள்ளிக்கோட்டையில் நான் கடமையாற்றிவருகையில், கனகசபைப்பிள்ளையவர்கள் கல்லிக்கோட்டைப் பகுதி நீதிஸ்தலத்தில் நடந்து வந்த ஒரு தபால் நிலைய வழக்கைக் கவனிக்க வந்தார். நான் 'இந்தச் சமயத்தை நழுவ விடலாகாது. இந்தப் பெரியாரைக் கண்டே தீரவேண்டும்' என்று நினைத்து அவர் தங்கியிருந்த இடத்துக்கு எனது நண்பர் ஒருவருடன் சென்றேன். என்னை நானே அறிமுகப்படுத்திக்கொண்டேன்.

"உட்காரும்" என்றார்.

நான் உட்காரத் தயங்கினேன்.

"இது என் வீடு, நமது வீடேறி வந்தவர்களை வரவேற்க வேண்டுவது நமது கடன். நீரும் உமது வீட்டின் தலைவர்தான், நான் உமது வீட்டுக்கு வந்தால், அப்போது நீர் என்னைப் பார்த்து 'உட்காரும்' என்றால் நான் உட்காரத்தானே வேண்டும். இங்கு நாம் நண்பர்கள்தானே!" என்றார்.

நானும் எனது நண்பரும் இரு ஆசனங்களில் அமர்ந்தோம். பிள்ளையவர்கள் எங்களுடன் மிகுந்த அன்புடன் அளவளாவினார்.

அப்போது அவர் என்னை நோக்கி நான் உம்மைக் கவனிக்கமாட்டேன் என்று கருதி, மதுரைக்கு வர மறுத்தீர்போலும்! என்றார்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்டு நான் எனது நிலையை எடுத்துரைத்தேன். அவர்கள் எனது உரையை ஏற்றுக்கொண்டு எனது பிதிர்பக்தி—சகோதரவாஞ்சைகளைப் பாராட்டினார்.

இது நடைபெற்ற பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பின் நான், மைசூரில் தபால் நிலையப் பரிசோதகராகச் சில வருஷங்கள் கடமையாற்றி வந்தேன். அப்போது பல வருஷங்களுக்கும் முன்னர், பிள்ளையவர்கள் அதே பிரதேசத்திற் பரிசோதகராகக் கடமையாற்றி வந்தனர் எனவும் அறிந்தேன். அவர் ஒவ்வோர் நிலையத்திலும் உள்ள புஸ்தகங்களில் எழுதியிருந்த குறிப்புகள் கண்ணைக் கவரும்படி இருந்தன. அவற்றைக் கண்டு மகிழ்ந்தேன். அவரது குறிப்புகளிற் சொற்பிழையோ, திருத்தப்பாடுகளோ இருக்கவில்லை.

செய்வன திருந்தச் செய்வதில் அவர் சமர்த்தர் என அறிந்தேன்.

# தமிழுக்கு இது ஏனோ?

— புதுவை சுப்பிரமணியன் —

"தமிழ்வாழ்க" வென்று தலைவெடிக்கக் கத்தித்
தமிழ்வாழத் தாமொன்றுஞ் செய்யார்—அமைவுடைய
ஆன்றபணி செய்தே அருந்தமிழை வாழவைக்கும்
சான்றோரைச் சாரார்ஏ னோ?

மருந்தென்றால் நோய்தான் மறைந்திடுமோ? பசியும்
விருந்தென்றுசொன்னால்விடைகொளுமோ?—மற்றிங்(கு)
இருந்தமிழும் வாழ்த்தால் இருந்திடுமோ இஃது
தெரிந்திடார் ஏனோ தெளிந்து?

நாற்புறத்துந் தாழ்வுற்று நந்தமிழர் மாயுங்கால்
ஏற்புடைத்தோ இன்றமிழ்வாழ்கெனல்—மேற்கொண்டு
தண்ணமுதோ தேனூற்றுத் தானோ தமிழென்று
பண்ணிசைத்துப் பாடுவதே னோ?

பல்லாண்டாய்ப் பாரில் நிலையுற்ற பைந்தமிழுக்(கு)
இல்லாத மாற்றங்கள் இன்றெண்ணும்—பொல்லாத
'பல்குழுவும்பாழ்செய்யும் உட்பகையும்கொல்குறும்பும்'
பல்கிய தேனோ பகைத்து?

வடிவழகை வாழும் இலக்கணத்தை மாற்றி
முடிவில்லா முத்தமிழின் மூச்சை—நொடிக்கும்
விழைவேன்? விழலுக்கு நீர்பாய்ச்சி மாயும்
உழைப்பதனில் ஊக்கமும்ஏ னோ?

செம்மையின் எல்லைக்கோர்சீர் திருத்தம்வேண்டுமெனத்
தம்மைமறந் தார்க்கின்றார் தீந்தமிழ்—அம்மையே!
நல்லவைசெய் யாரெனினும் அல்லவை நாடாமல்
நல்லபடி வாழார்ஏ னோ?

# அமெரிக்க குழந்தைகள் தினம்

## அவர்கள் வாழ்வில் அரசினர் சிரத்தை

அமெரிக்கர் மே மாதம் முதலாந்தேதியன்று குழந்தை ஆரோக்கிய தினம் கொண்டாடுவார்கள். எதிர்காலச் சந்ததியாரின் ஆரோக்கிய நலனைப் போஷிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

1928-ம் ஆண்டு முதல் அமெரிக்கர், ஆண்டுதோறும் குழந்தை ஆரோக்கிய தினத்தைக் கொண்டாடி வருகிறார்கள். அந்த ஆண்டில் யு. எஸ். காங்கிரஸே இதைத் தீர்மானித்தது. மே மாதம் முதலாந் தேதியைக் குழந்தை ஆரோக்கிய தினமாகக் கொண்டாடுவதற்கு ஒரு பிரகடனம் விடுக்கும்படி அத் தீர்மானம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டது.

இவ் வேண்டுகோளின் பிரகாரம், முதற் பிரகடனமானது 1929-ம் ஆண்டு ஜனாதிபதி ஒருவரால் விடுக்கப்பட்டது. அவரது அழைப்பின் பேரில் ஏராளமான மக்கள் 1931-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜனாதிபதி மாளிகையிற் கூடிக் குழந்தைகளது ஆரோக்கியத்தைப் போஷிக்கும் ஏற்பாடுகள் குறித்து ஆலோசித்தார்கள். அவர்களால் 'குழந்தைகள் சாசனமொன்று' வகுக்கப்பட்டது. அந்தச் சாசனத்திற் கண்டுள்ள சிபார்சுகள் வருமாறு:

1. ஒவ்வொரு குழந்தைக்கும் ஆத்மீக, தார்மீக பயிற்சி.

2. குழந்தையின் விசேஷ குணத்தைத் தீர்மானித்து அதனைப் பாதுகாத்தல்.

3. ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பும் பாதுகாப்பும் உள்ள இல்லம் அவசியம். வளர்ப்புக் குழந்தைகளுக்கும் இதுபோன்றுவசதிவேண்டும்.

4. ஒவ்வொரு தாயும் கருவுற்றதுமுதல் அவளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக் குழந்தை நல்லபடியாகப் பிறக்க வசதி செய்தலும், பிரசவ சிகிச்சை வசதியும் அவசியம்.

5. பிறப்பு முதல் காளைப் பருவம் அடையும் வரையில் ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். அவ்வப்போது ஆரோக்கியம் குறித்து நிபுணர்களைக் கொண்டு சோதனையும் வைத்தியசாலைச் சிகிச்சையும் செய்தல் வேண்டும். பற்களைப் பரீட்சிக்கவும், தொத்து வியாதிகள் வராமற் பாதுகாக்கவும் வேண்டும். சுத்தமான ஆகாரம், பால், தண்ணீர் இவை தரப்படவேண்டும்.

6. போதிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மூலம் உடல் நலத்திற்கும் உள்ளத்தின் உல்லாசத்திற்கும் வசதி செய்தல்.

7. பாதுகாப்புள்ளதும் சுகாதாரம் பொருந்தியதுமான வீடு வசதி, மலசலம் கழிக்க மறைவான இடமும் ஏற்பாடு செய்தல்.

8. குழந்தைகள் சம்ரக்ஷணைக்கு வசதியுள்ள பாடசாலைகள்.

9. ஒவ்வொரு குழந்தையின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஆபத்திலிருந்து பாதுகாப்பு அவசியம். விளையாட்டிற்கும் உல்லாசப் பொழுதுபோக்கிற்கும் வசதிகள்.

10. விசேஷ ஆற்றல்களை விருத்தி செய்வது மூலம் குழந்தையை வாழ்க்கைக்கு ஆயத்தஞ்செய்யக்கூடிய கல்விவசதி; ஜீவனோபாயம் தேடிக்கொள்வதற்கு ஏற்றதொழிற்பயிற்சி.

11. பெற்றோர்களாகிக் குடும்ப பாரத்தை நிர்வகிக்கவும் பிரஜா உரிமைகளை உணரவும் குழந்தைகளுக்குப் போதனை செய்தல்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்
(நச்சினார்க்கினியம்)
இரண்டாம் பதிப்பு
மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் எழுதிய
உரை விளக்கக் குறிப்புக்களுடனும்,
அவர்கள் திருத்திய சில புதிய திருத்தங்களுடனும்
வெளிவந்துவிட்டது
விலை: ரூபாய் 7-00. :: :: தபாற் செலவு வேறு.
தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம், இலங்கை

புத்தகங்கள். பத்திரிகைகள். விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம்.

1930

# ஈழகேசரி

சுன்னுகம், நந்தன வை. உசா
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805

## புதிய மந்திரி சபை

எதிர்க்கட்சியினரதும் சுயேச்சையாளரினதும் உதவியின்றி அரசியலை நடாத்தக்கூடிய முறையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர். இக் கட்சியினரின் கொள்கையும் நோக்குமே காலத்துக்கும் நாட்டின் நிலைக்கும் ஏற்றதாக இருந்தமையாற்றுன் நாட்டுமக்கள் விசேஷமாகத் தேர்தலில் இக் கட்சியினரை ஆதரித்தனர். எனவே வெற்றிபெற்று அதிகாரத்தைப் பெறும் இக்கட்சியினரே இப்போது மந்திரி சபையை அமைத்துள்ளார். இன்று நம்நாடு எத்தனையோ விஷயங்களைச் செய்து முடிக்க வேண்டியதாகிறது. எனவே, மந்திரிப்பதவிகளைப் பெறுவோரின் பொறுப்புச் சாமானியமானதன்று. நாடு ஏற்ற முறையிற் பல்வேறு துறைகளிலும் விருத்தி யடைவதற்கு மந்திரிமார் நன்மை தரும் திட்டங்களை வகுத்துக் கண்ணுங்கருத்துமாகப் பணியாற்றவேண்டும். நீர்வளம் நிலவளம் பெரிதும் கைவந்த நமது நாட்டின் செல்வத்தை விருத்தி செய்தாற்றுன் மக்கட்கு மீட்சியும் உயர்வும் வந்தெய்தும்.

மந்திரி சபையினை அமைக்குமிடத்து எல்லா வகுப்பினரையும் சாதியினரையும் அரசினர் திருப்தி செய்வது அவசியம். ஒரு குறிக்கப்பட்ட சாதியினரின் ஒத்துழைப்பால் மாத்திரம் நமது நாடு நற் கதியடைய முடியாது. நாட்டில் வாழும் மக்கள் யாவரும் சாதிபேதமின்றித் தம்முடைய நாடு என்ற ஆர்வத்துடனும், விசுவாசத்துடனும் பணியாற்றுவதற்கான தகுதியும் ஆற்றலும் வாய்ந்தோர் மந்திரிசபையில் இடம் பெறுவது அவசியமாகும். செயலாற்றுவதில் அனுபவமும் திறமையும் படைத்தோரும், நேர்மையும் நடுவு நிலைமையும் கைவந்தோரும் மந்திரிப் பதவிகளைப் பெறின் நாட்டின் முன்னேற்றம் தளப்படியின்றிக் கைகூட இடமுண்டு. எனவே புதிய மந்திரிசபை சகலவிதத்திலும் சிறந்ததாக ஏற்படுவதில் யாவரும் மிக்க கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். அதிகாரம் பெற்ற கட்சியினர், மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கைக்கு மோசம் வராதபடி நிதானமாக நடக்கவேண்டியது மிக மிக அவசியமாகும்.

இலங்கையின் பொருளாதார நிலை உண்மையான முறையிற் சீரடைந்து உறுதியடையச் செய்வதிற் புதிய மந்திரி சபையினர் விசேஷமாக அக்கறையும் அபிமானமுங் காட்ட வேண்டும். [...]ணவுக் கஷ்டம், வீட்டுக் [...]ம் என்பன நீங்கி, மக்[...] வாழ்க்கைத்தரம் உய[...]ய்வதில் மந்திரிசபை [...] பெரிதுங் கவனஞ் செலுத்த வேண்டும். வகுக்கப்படும் திட்டங்கள் விரைந்து பூர்த்தியடைய வேண்டிய சாதனங்களை நன்கு ஆராய்ந்து தேர்ந்து கைக்கொள்ள வேண்டும். கைக்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் முறைகள் என்பன சித்தியடைந்து பெரு நன்மைகளை நாட்டு மக்கட்குக் கூட்டிவைத்தாற்றுன் மேலும் மேலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் இலங்கை மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறக்கூடியவராவர். இதற்கு நேர்விரோதமாக மக்களை ஏமாறச் செய்யின் பொது மக்களை அவசியமின்றிப் புரட்சிக் கொள்கைகளையுடைய எதிர்க்கட்சிகளுக்குட் புகுத்துவதாகவே முடியும். அடுத்த சில வருடங்கள் இலங்கைக்கு நெருக்கடியோடுகூடிய காலமாகும். மிக ஆராய்வுடன் அரசியலைத் திறம்பட நன்மையுடன் நடத்தினுற்றுன் கஷ்டகாலத்தை ஒருமாதிரிச் சமாளிக்க வியலும்.

பிரதம மந்திரியாராகத் தலைமை தாங்கும் திரு. டட்லி சேனநாயகா அவர்கள் கடமையாற்றிய சிறிய காலத்துள் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும். இலங்கையில் வசிக்கும் மக்கள் யாவரும் ஒரே சாதியினரென மதித்து எவ்வித பேதமும் வித்தியாசமுங் காட்டாது அரசியலை நடாத்திச் செல்லின், மக்களுக்கிடையில் ஒற்றுமையும் நல்லிணக்கமும் இனிது கைகூடி உறுதியடையுமன்றோ? எல்லாவகையாலும் திருப்தியும் சமாதானமும் அடைந்த மக்களையுடைய நாடுதான் பெருநிலை அடையுந் தகுதியுடையது. ஆகவே அதிகாரத்தைப் பெற்று அரசியலை நடத்தும் பிரதம மந்திரியார் அனைவரின் நம்பிக்கையையும் பெறக்கூடிய முறையில் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். அரசியற் பாரத்தை ஏற்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் மேலும் வன்மையும் பலமுமடைந்து கொள்வதற்கும் அதுவே வழியாகும். புதிய மந்திரி சபையினர் ஆரம்பித்துள்ள ஆட்சி சிறப்பும், மதிப்பும் பெற்றுத் தேசமக்களை நன் நிலையில் வைப்பதாக.

## ஸ்ரீலஸ்ரீ கே. இராமநாதன்

### யாழ்ப்பாண விஜயம்

அகில மலாய தமிழ்ப் பண்ணைத் தலைவரும், அகில மலாய இந்து சமயப் பிரசாரண சபாத் தலைவருமாகிய ஸ்ரீலஸ்ரீ கே. இராமநாதன் பி. ஏ., பி. எல். அவர்கள் இம்மாசம் 20-ந் திகதிவரையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இங்கு நாலு நாட்கள் வரை தங்கியிருப்பார் எனத் தெரிகின்றது. குறித்த திகதியும் அவர் தங்கிநிற்கும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். இவரது வருகையை மலாயாவிலிருந்த இலங்கை அன்பர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகும். சகல விபரங்களையும் வர்த்தலைவிளான், இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆர். ரீ. சிவரத்தினம் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

## திரு. வைத்திலிங்கம் நியமனம்

### இலங்கை இந்தியக்காங்கிரஸ் கண்டனம்

இலங்கை இந்தியர் நலத்துக்காகப் பிரதிநிதிகள் சபையில் திரு. எஸ். பி. வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இதனை இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஆட்சேபித்துப் பிரதமருக்குத் தந்தியனுப்பியுள்ளது.

## [illegible] சந்தில் மட்டைசாரி

எதிர்க்கட்சியினர் சில தினங்களுக்கு முன்னர் கூடித் தேர்தலின் போது வாக்குச் சீட்டுகள் வெளியாகியுள்ளதாகக் கூறப்படும் விஷயத்தைப்பற்றியும், அதோடு சேர்ந்து வந்த மர்மங்களைப்பற்றியும் ஆலோசித்தனர். ஊழல்களை அகற்றுவதற்காக எதிர்க்கட்சியினர் முனைந்து நிற்பதை எக்கட்சியினரும் வரவேற்பார்கள் என்றே நம்பவேண்டும். வாக்காளரிடையே இச்சம்பவம் மிகுந்த சந்தேகத்தை உண்டாக்கியிருப்பதால் இதனை அலசி ஆராய்ந்து உண்மையை அறிவதற்கு ஒரு விசாரணைச்சபையை ஏற்படுத்த வேண்டுமெனப் பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினர் வற்புறுத்துவார்கள்.

### வீட்டுக் கஷ்டம்

புதிய மந்திரி கன்னங்கரா அவர்கள் இலங்கைச் சிறுவரின் கல்விக் கஷ்டத்தை நீக்குவதற்கு முன்வந்து வேறு சிலருக்குப் பல கஷ்டங்களை உண்டாக்கியிருந்தார். இந்தோனேஷியாவில் இவர் ஸ்தானிகராக இருந்தகாலத்தில் அங்கு குடியிருப்பதற்குப் நல்லவீடு இல்லாமற் கஷ்டப்பட்டார். இன்று எத்தனையோ வில்லங்கங்களுக்கிடையில் எம். பி யாகிச் சொந்த நாட்டில் மந்திரியாக இருக்கின்றார். புதிய ஸ்தல ஸ்தாபன மந்திரியாகிய இப் பெரியார் மத்திய வகுப்பினருக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்து அவர்களின் வீட்டுக் கஷ்டத்தை நீக்க முன்வந்துள்ளார். அரசினரைக்கொண்டு இதனைச் செய்து முடிப்பது தான் மிகக் கஷ்டமென்பதை அவர் அறியவில்லைப் போலும்.

### தோல்வியின் காரணம்

பொதுத்தேர்தலில் இடதுசாரிகள் படுதோல்வியடைந்ததின் காரணத்தை மேனுட்டுப் பத்திரிகை ஒன்று கண்டுபிடித்திருக்கின்றது. அது இது:

"இலங்கை வாழ் இந்தியர்கள் சார்பாக இடதுசாரிகள் தேர்தற்பிரசாரம் நடத்தினர். இது அவர்களுக்கே ஆபத்தாக முடிந்துவிட்டது. இப் பிரசாரம் சேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடியதாக இருந்தது. தவிர இலங்கையின் வடபாகத்திலுள்ள பெருநாடாகிய இந்தியாவின் மீது சந்தேகம் இருந்துவருகின்றது இங்கிருந்து பல மன்னர்கள் இலங்கைமீது படையெடுத்துள்ளனர்."

மேனுட்டுப் பத்திரிகைகள் இலங்கையும் இந்தியாவும் ஒற்றுமையாக வாழ்வதை எப்படி விரும்பும்?

# வாக்குச் சீட்டு ஊழல்?

## ஆராய வேண்டிய காரியம்

வாக்களிப்புத் தினம் ஆரம்பமாவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே ஓர் ஊழல் நாட்டிற் கருக்கொள்ளலாயிற்று. பழைய மந்திரி சபையில் இடம்பெற்ற திரு. குணசிங்கா அவர்கள் தேர்தலில் மண் கவ்வியதும் இந்த ஊழல் ஒரு சில பத்திரிகைகளிற் பிரமாதமாக அடிபட்டது. அப் பத்திரிகைக்காரர்கள் தமது அச்சகத்திலுள்ள மிகப் பெரிய கொட்டை எழுத்துக்களிலே தலைப்புக்கள் தீட்டிப் பொதுமக்களைத் திணறவைத்தனர்.

தேர்தலுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் குறித்த தினத்துக்கு முன்னதாகவே வெளியாகி ஒரு சில அபேட்சகர்களின் கைக்குட் புகுந்துவிட்டதெனச் சொல்லப்படுவதே இந்த ஊழல் ஆகும். இதனை முதன் முதற் பகிரங்கப்படுத்திய பெருமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு பண்டாரநாயகா அவர்களுக்கே உரியது. தேர்தற் பொறுப்புக்களை மேற்பார்வை செய்துவரும் தலைவர் இதனை அறிந்தவுடன் அப்படியான காரியம் எதுவும் நடைபெறவில்லை யெனவும் வாக்குச் சீட்டுக்கள் அத்தனையும் அரசினர் அச்சகத்திற் சிக்காராக வைக்கப்பட்டிருந்தனவெனவும் உறுதி செய்தார். ஆனால் எதிர்க்கட்சியினரும் பெரும்பான்மையான பொதுமக்களும் இதனை ஏற்க மறுக்கின்றனர். ஏதோ அடாத வேலை நடைபெற்றிருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். இத்தகைய ஒழுங்கீனம் வாக்குச்சீட்டு விஷயமாக நடைபெற்றிருந்தால் அதனைத்தக்க ஆதாரங்களுடன் அத்தாட்சிப்படுத்துமாறு தேர்தற்பகுதி அதிகாரி பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

உண்மையாகவே இத்தகைய ஒழுங்கீனம் ஏற்பட்டிருக்குமாயின் அரசாங்கம் வெட்கித் தலைகுனியவேண்டும். ஆகவே, இது சம்பந்தமான விசாரணை ஒன்றை நடாத்தி ஆவன செய்யவேண்டியது அரசினரின் தலையாய கடனாகும். நாட்டுமக்களின் நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டதென்ற அபிப்பிராயம் நிலவும் போது ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டு 'தர்பார்' நடத்துவது ஜனநாயகமாகாது.

இதுநிற்க, புத்தளை என்ற இடத்திற் பழுதுற்ற வாக்குச் சீட்டுக்கள் ஒன்றுமே இருக்கவில்லை. புத்தளை ஊவாமாகாணத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியாகும். இங்கு வாக்களித்த அத்தனைபேரும் நன்றாகப் படித்தவர்களாக இருந்தபடியாற்போலும் ஒரு சீட்டுத் தானும் பழுதடையவில்லையெனக் கருதுவதா, என்ன? ஒரு வாக்குச் சீட்டுத் தானும் புத்தளைத் தேர்தலிற் பழுதடையவில்லையே என்பதை நினைக்கும்போது 'சபாஷ் புத்தளை!' என்றுசொல்லத் தோன்றுகின்றது. அவ்வளவேதான்.

## புதிய மந்திரி சபை

பிரதமரும் பாதுகாப்பு வெளிநாட்டு மந்திரியும்: திரு. டட்லி சேனநாயக.

பாராளுமன்றக் காரியதரிசி; மேஜர் மொன்ரேகு ஜயவிக்கிரம.

நிதிமந்திரி: திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன.

பா. காரியதரிசி: செனேட்டர் எல். ஐ. ஹன்றர்.

நீதிமந்திரி: சேர் லலிதா ராஜபக்ஷ.

பா. காரியதரிசி; திரு. ரி. பி. பானபொக்க.

போக்கு வரத்து மந்திரியும் சபை முதல்வரும்; சேர் ஜோன் கொத்தலாவல.

கிராமாபிவிருத்தி மந்திரி: திரு. ஏ. இரத்நாயக.

பா. காரியதரிசி: திரு. எம். சேனநாயக.

விவசாய — உணவு மந்திரி: சேர் ஒலிவர் குணதிலக.

பா. காரியதரிசி: திரு. வி. குமாரசுவாமி.

காணியபிவிருத்தி மந்திரி: திரு. பி. பி. புலங்குளம திசாவ.

பா. காரியதரிசி: திரு. வி. ஜி. டபிள்யூ. இரத்நாயக.

சுகாதார மந்திரி: திரு. ஈ. ஏ. நுகவல.

பா. காரியதரிசி: திரு. சிறில் அற்றிகல.

ஸ்தல ஸ்தாபன மந்திரியும் ஆட்சிக்கட்சி யொழுங்குப் பாதுகாவலரும்: திரு. ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர.

பா. காரியதரிசி: ஜனப் எம். எம். இப்ராஹிம்.

கல்வி மந்திரி: திரு. எம். டி. பண்டா.

தொழில்—சமூக சேவா மந்திரி: டக்றர் எம் சி. எம். கலீல்.

பா. காரியதரிசி: மேஜர் ரி. எவ். ஜயவர்த்தன.

கைத்தொழில் — கடற்றொழில் மந்திரி: திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

தபால்—தகவல் மந்திரி; திரு. வி. நல்லையா.

பா. காரியதரிசி; திரு. என் எச். கீர்த்திரத்ன.

வர்த்தக மந்திரி; திரு. ஆர். ஜி. சேனநாயக.

## பழைய ஓவியப் பிரதிகள்

### மல்லாகத்திற் காட்சி

ஐக்கிய நாடுகள் தேசிய சங்கத்தின் கலைவளர்ச்சிப் பகுதியார் உதவிய பழைய ஓவியப் பிரதிகள் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் இம்மாதம் 6-ம், 7-ம் திகதிகளிற் காட்சிக்குவைக்கப்பட்டுள்ளன. மக்கள் திரள் திரளாகச் சென்று அவற்றைப் பார்த்து மகிழ்கின்றனர். இக் காட்சி வித்தியா பகுதியின் சார்பில் சித்திரப் பரிசோதகர் திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களால் திறம்பட ஒழுங்குசெய்யப்பட்டது.

JUST OUT

N. P. T. A. 5th Standard Examination — 1952

Model Question Papers IN ENGLISH

Price 60 cts. ←——— Postage Extra

THANA LUCKUMY BOOK DEPOT, CHUNNAKAM

# இருகட்சிகள் இணைப்பு

## இதனுற் கொம்யூனிஸ்டுகள் ஏமாற்றம்

இந்தியாவிலுள்ள இரு பெரும் அரசியற் கட்சிகள் ஒன்று சேர்ந்துகொள்ள இணங்கி விட்டன. ஆசாரிய கிருபளானியின் தலைமையில் அமைக்கப்பட்ட 'கிருஷாமகதூர்' என்ற கட்சியும், ஜெகத்பிரஸாத் நாராயணன் தலைமையில் நிலைபெறும் ஸோஷலிஸ்ற் கட்சியும் ஒன்றுசேர்ந்து ஸோஷலிஸ்ற் பிரஜாக்கட்சி என்ற நாமத்துடன் பாராளுமன்றங்களிலும் புது டில்லியிலுள்ள பொதுமக்கள் சபையிலும் விளங்கும். இவ்விரு கட்சித் தலைவர்களும் பழுத்த காங்கிரஸ் வாதிகளாக இருந்தவர்கள். காங்கிரஸ் சபையுடன் வேற்றுமை அடைந்து பிரிந்து சென்றவர்கள். என்றாலும் காங்கிரஸின் அடிப்படையான அம்சங்களை இவர்கள் கைவிடவில்லை. இக்கட்சிகட்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டதும் இனி கொம்யூனிஸ்ட் கட்சிகள் தனியே விடப்படும். சென்னையில் கிருஷமகதூர் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து உழைக்கமுயன்றது. இந்த எத்தனம் விடப்பட வேண்டியதே.

### பெருஞ் செலவு

இந்தியா சுதந்திரம் பெற்றதும் சேனைகளின் பொருட்டு ஏற்பட்டுவந்த செலவு பன்மடங்கு குறையுமென யாவரும் எதிர் பார்த்தனர். எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அச் செலவு கூடிக் கொண்டே வருகின்றது. மற்றைய நாடுகளுடன் சமாதானத்தை நாடும் இந்தியாவுக்கு இப்படி எதற்காகச் செலவு கூடவேண்டுமென்று டில்லிப் பொதுமக்கள் சபையில் டொக்டர் அம்பேத்கார் கண்டித்துப் பேசினர். வீணாக ஐம்பது கோடி ரூபாய் மேலதிகமாக இராணுவத்தின் பொருட்டு இந்திய அரசினர் ஏன் செலவிட வேண்டுமெனக் கேட்டனர். இப் பணத்தை இந்தியாவின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தக் கூடிய திட்டங்கட்கு விடக் கூடாதா என்று கேட்டனர். இந்தியாவின் சத்துராதியாக விளங்கும் நாடு பாகிஸ்தான் ஒன்றே. வேறு நாடுகள் விரோதம் பாராட்டுவது இல்லை. பாகிஸ்தானுடன் பகையதிகரித்து வருவதற்கும் காஷ்மீர் பிரச்சினையேகாரணமென்றார் டொக்டர் அம்பேத்கார். இந்தக் காஷ்மீர் பிணக்கினை விரைவில் ஒழித்துவிட்டால் அதிக பணம்மிகுதியாகுமென்றார்.

### காஷ்மீர்ப் பிணக்கு

சென்ற ஐந்து வருடங்களாக ஏற்பட்டுக் கலக்கிவரும் இப் பிரச்சினை என்று முடியுமோ தெரியவில்லை. டொக்டர் கிரஹாம் வெளியிட்ட பன்னிரண்டு அம்சங்கள் கொண்ட அறிக்கையைப் பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு நாடுகளும் முற்றாக இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. காஷ்மீருக்குள் நிற்கும் பாகிஸ்தான் படைகள் யாவும் அகற்றப்பட வேண்டுமென்று இந்திய அரசினர் கேட்கின்றனர். அப்படியே இந்திய படைகளும் காஷ்மீரில் இருந்து வெளியேற வேண்டுமென்கின்றனர். பாகிஸ்தான் அரசினர் டொக்டர் கிரஹாம் அறிக்கைப்படி ஐந்துபங்கு இந்தியப்படைகளும் நான்குபங்கு பாகிஸ்தான் படைகளும் நிற்கலாமென்பது பீடிகை. இதை இந்திய அரசினர் ஒத்துக்கொள்ளவில்லை. இந்தியா காஷ்மீர் மீது படையெடுத்துச் செல்லவில்லை. பாதுகாப்புக்காகவே படைகளை அங்கு நிறுத்தியுள்ளது. பாகிஸ்தான் படையெடுத்துக் காஷ்மீருள் நுழைந்தது யாவரும் அறிவர். மேலும் பாகிஸ்தான் படைகள் சமபூமியில் நிற்பன. விரைந்து முன்னேறிப் புதிய இடங்களைக் கைப்பற்ற இயலும். இந்திய படைகளோ அப்படியன்று. மலைப்பிரதேசங்கள் பள்ளத்தாக்குகளில் நிற்பன. விரைந்துகொண்டு செல்ல இயலாது. எனவே இந்தியப் படைகளை அளவு கடந்து அகற்ற இந்திய அரசினர் ஒருப்படுகின்றாரில்லை.

### அந்நிய மூலதனம்

இந்தியாவிலே தொழில்விருத்தி விரைந்து முன்னேறவேண்டுமாயின் அந்நியர் அங்கு தொழில் ஸ்தாபனங்களை அமைக்க இடங் கொடுக்க வேண்டும் இதனை இந்திய அரசினர் பெரிதும் அங்கீரிகரித்துள்ளார். அந்நியரின் உதவி இவ்விஷயத்திற் கிடைத்தாற்றான் இந்தியா தொழிற்றுறையில் விரும்பிய விருத்தியை அடையக் கூடும். அந்நிய நாட்டி

## இந்தியா

ன் முதலும் இந்த விஷயத்திற்கு உதவியாகவேண்டும். சென்ற வருடம் இந்தியாவுக்குள் தொழில் ஸ்தாபனங்கள் அமைக்க வந்து சேர்ந்த பணம் 15 கோடி ரூபாயாகும். தொழில்களால் வரும் இலாபத்தில் ஒருபங்கு இந்திய அரசினர்க்கே உரியது. குறிக்கப்பட்ட ஒரு கால எல்லைக்குள் இவை தேசிய ஸ்தாபனமாக மாறவேண்டுமென்பது ஒழுங்கு.

### தண்ணீர்ப் பஞ்சம் குறைவு

சென்ற சில மாதங்களாகச் சென்னை மாகாணத்திலும் வேறு இடங்களிலும் ஏற்பட்ட தண்ணீர்ப்பஞ்சம் சமீபத்தில் அங்கே வருஷித்த பெருமழையின் காரணமாக நீங்கியதாகும். புதிய கிணறுகள் கூபங்கள் வெட்டுவதில் ஈடுபட்டு அரிய தொண்டாற்றிய இராணுவப்படையினர் இனி இத்துறையில் ஈடுபட வேண்டியதில்லை. சென்னைநகரில் ஏற்பட விருந்த தண்ணீர்ப்பஞ்சமும் நீங்கிவிட்டது. அரசினர்க்கு இம்மழை பெரிய ஆறுதலைக் கொடுத்துளதென்றே கூற வேண்டும். தண்ணீர்ப்பஞ்சம் நீங்கியும் உணவுப்பஞ்சம் இப்போது அண்மையில் நீங்குவதாகக் காணோம்.




# மந்திரிமார் பதவியேற்றனர்

## சுயேச்சையாளருக்கு நல்ல பாடம்!

5.6.52

தேர்தற் புயல் அடித்து ஓய்ந்துவிட்டது. மந்திரிமாரும் பதவியேற்றுவிட்டனர். இம்முறை திரு. வி. நல்லையா அவர்கள் தபால், - தகவல் மந்திரியாக நியமிக்கப்பெற்றது மகிழ்ச்சிக்குரியதே. கடைசி வரை யூ. என். பி. யுடன் நின்றபடியால் அவருக்கு நல்ல பலன் கிடைத்தது. தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசுவாமியவர்களும் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமனம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளார். வடமாகாணத்தில் யூ. என். பி. கட்சியைச் சேர்ந்து போட்டியிட்ட திரு. எஸ். நடேசன் அவர்களுக்கு இதுவரை ஏன் எவ்வித பதவியும் அளிக்கப்படவில்லை என இங்குள்ள தமிழர்கள் அறிய ஆசைப்படுகின்றனர். பழைய அரசியல் ஞானியாகிய இவரை யூ. என். பி. மறந்திருக்கமுடியாது; காரணம் வேறேதுமுண்டோ தெரியவில்லை. நியமன அங்கத்தவர்களுள் இந்தியப் பிரதிநிதிகளாக இருவரைச் சேர்த்திருந்தால் புத்திசாலித்தனமாகும் எனச் சில வட்டாரங்களில் பேசப்படுகிறது. புதிய மந்திரிகள் கடமையாற்றத் தொடங்கிவிட்டனர். சுயேச்சை வாதிகளாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் பாடு இம்முறை அதோகதிதான். தபால் மந்திரி திரு. சிற்றம்பலம் அவர்கள் சுயேச்சை வாதியாகப் போட்டியிட்டு வென்றபோதிலும் இம்முறை மந்திரி சபையில் இடம்பெற முடியாதுபோயிற்று. கட்சிகளிற் சேர்ந்து போட்டியிடுவதன் முக்யத்வத்தை இம்முறை சுயேச்சைவாதிகள் உணர்ந்தேயாகவேண்டும்; பலர் யூ. என். பி. கட்சியுடன் ஒத்துழைக்க விரும்புவதாகப் பிரதம மந்திரிக்கு அறிவித்திருக்கின்றார்களாம். அவர்கள் வேறு என்னதான் செய்யமுடியும். தேச சேவைக்கெனக் கங்கணம் கட்டிய இவர்கள் இனிமேலாவது ஏதாவதொரு கட்சியைச் சேர்ந்து போட்டியிடக் கற்றுக்கொள்வார்களாக.

### கௌரவப்பட்டங்கள்

அமெரிக்காவில் இலங்கை ஸ்தானிகராக இருக்கும் திரு. ஜி. எஸ். கோரியா அவர்களுக்கும் டக்டர் போல் ஈ. பீரிஸ் அவர்களுக்கும் இம்முறை சேர் பட்டம் மகாராணியின் பிறந்ததின கௌரவப் பட்டமாக வழங்கப்பெற்றது. தமிழ் மந்திரி ஒருவருக்கும் ஸேர் பட்டம் கிடைக்கப்போகின்றதென்ற பொய்வதந்தி சென்ற கிழமையிற் கொழும்பிற் பரவியது. மானிப்பாயில் சமூக சேமாபிவிருத்தி, தேசிய சேமிப்பு இயக்கம் முதலியவற்றில் ஈடுபட்டுழைத்த முதலியார் சி. தியாகராசா அவர்களுக்கு இராசவாசல் முதலியார்ப் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. முகாந்திரம் ஜே. சின்னத்துரை, முகாந்திரம் பி. திருஞானசம்பந்தர் என்னுமிருவரும் முதலியார்ப் பட்டம் பெறுகின்றனர். திரு. வை. மகேசன், திரு. சி. முத்துக்குமாரு, திரு. இ. தியாகராசா ஆகிய மூவரும் முகாந்திரப் பட்டம் பெறுகின்றனர்.

### புதிய மந்திரி சபை

புதிய மந்திரி சபை இன்று காலை முதன் முதலாகக் கூடி இராணியின் பிரசங்கத்தைப் பற்றி ஆராய்ந்தது. அடுத்த செவ்வாய்க்கிழமை கூடும் பாராளுமன்றக் கூட்டத்திற் கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபு இராணியின் பிரசங்கத்தை நிகழ்த்துவார்.

# தேர்தல்விநோதம்

இம்முறை நடந்த தேர்தலில் முன்னர் ஒருபோதும் நடைபெறாத விநோதங்கள் புதிது புதிதாகத் தோன்றி யாவரையும் அதிசயமடையும்படி செய்தன. அற்புதமான முறையிலே தேர்தல் நடந்ததெனலாம். நாட்டாண்மைக்காரர், நயவஞ்சகர், சுயநலப் புலிகள், பணமடிப்போர் போன்றவர்கள் வாக்காளர்களை ஏமாற்றமுடியவில்லை. தாம் தாம் விரும்பியவர்க்கே பொதுமக்களாகும் வாக்காளர் தமது வாக்குகளை வழங்கினர். தேர்தற் காலங்களில்மட்டும் தலைகாட்டிக் கள்ளச் சந்தையிற் கொள்ளையடிப்பவர்போன்று ஏழைகளை ஏமாற்றும் நாட்டுப்புள்ளிகள் மௌனஞ் சாதித்து வாளாவிருந்தனர்.

### குடும்பத்தில் வேற்றுமை

இம்முறையைப்போல் என்றும் குடும்பங்களில் சமுதாயங்களில் வேற்றுமை ஏற்பட்டதில்லை. தந்தையை எதிர்த்து மைந்தனும் தமயனை எதிர்த்துத் தம்பியும் மாமனை எதிர்த்து மருகனும் தலைநிமிர்ந்துநின்று கட்சி கட்டி வாக்குவாதஞ்செய்து வேட்டையாடினர். சிற்சில விடங்களில் புருஷன் மனைவியும் வேறுபட்டதுண்டு. இப்படியான வேற்றுமை முன்னடந்த தேர்தல்களில அதிகம் காணவியலாது. இவ்வித குழப்பங்களை மக்க சித்தியுடன புகுத்தின கட்சியினரைப் புகழாதிருக்க வியலாது. இதற்கும் சமாதானம் கூறினர். எவரெதைச் சரியெனக் காண்கின்றாரோ அப்படியே எவருஞ் செய்யலாம். இதுவுமோர் சனநாயகப் பீடிகை. பேஷ்! அடுத்ததேர்தலில் இதிலும் வென்ற அம்சங்கள் தோன்றுமாம்.

### தோல்வி மனப்பான்மை

தோல்வியடைந்தவர்கள் தாங்கள் நெறிதவறாதவர்களெனவும் மற்றவர் என்னவோ எல்லாம் செய்தாரென்றும் கூறித் தம்முள் மகிழ்ந்துகொள்கின்றனர். தம்முடைய பொட்டுக்கேடுகள் வெளிவரவில்லையென்பதுதான் இவர் மனப்பான்மை. உண்மையை அறியாதாருக்கு இப்படிக் கூறிவிடலாம். இது விழுந்தவன் மீசையில் மண்படவில்லையென்பது போலாகும். தமது கட்சிக்கு வல்லடி வழக்குப் பேசிய ஆவரங்கால் கந்தர் தேர்தலின் அடுத்ததினம் மாண்டதைக் கேட்டு மற்றவர் மேற் பழிசுமத்தி ஏன் உழலவேண்டும்? தோல்வியை அமைதியாக ஏற்க வியலாதார்க்கு வெற்றி எப்படிவரும்?

### போனது போகட்டும்

'போனது போகட்டும், அடுத்தமுறை ஒருகை பார்ப்போம்' என்று நெஞ்சுதட்டி அமர்ந்தாரும் சிலருளர். இன்னும் தனியரசு, பூவரசு, வெள்ளரசு, புறவரசுக் கட்சிகளுக்கு இடமிருப்பதாகச் சிலர் மனப்பால் குடிக்கின்றனர். மக்களைப் பிரித்து, வேற்றுமைகளைக் கிளப்பி, ஒற்றுமைக்கு ஊறுசெய்வோர் இனியாவது தமது கபட நாடகங்களுக்கு ஏடுகட்டவேண்டாமா? இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தினாற்றான் இலங்கைக்கு நற்காலம் பிறந்ததெனலாம். இலங்கையிலுள்ள எல்லா வகுப்பினரும் சாதியினரும் ஒத்துழைத்தாற்றான் இது கைகூடும். அதைவிட்டு இலங்கையிற் பாகிஸ்தான்களை நாடுவோர் தேசவிரோதிகளன்றி நண்பராவதெப்படி?

### தேர்தல் வீரம்!

தேர்தல் காலத்தில் எழுந்த வீரமும் ஆத்திரமும் தேசாபிமானமும் இம்மாத்திரமன்று. இந்நிலை எத்தனை நாட்களுக்கோ தெரியவில்லை. தேர்தல் அமளிமுடிய இவைகளும் அதே மாதிரி மறையுமாம். தங் கட்சியிலும் தமது அபேட்சகர்கள் வெற்றியிலும் நாட்டமும் அபிமானமுங் கொண்டு நிலையறியாது சபதஞ் செய்து தோல்வியும் வெட்கமும் அடைந்தார் சிலர். மாத்துறைப் பகுதியில் தாம் செய்த சபதத்தை நிறைவேற்றச்சிலர் தலையையும் புருவத்தையும் முண்டிதஞ் செய்துகொண்டனர். தெல்லிப்பழையில் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வஞ்சினஞ்செய்தவொருவர் ஆயிரம் ரூபாயை இழக்கவேண்டியதாயிற்றாம். இன்னோரிடத்தில் ஒருவர் தமது ஆண்மையைக் காட்டும் மீசையை மழித்துவிட்டாராம். இச்சம்பவங்களும் இப்புதிய முறைத் தேர்தலின் கோலம்போலும். என்ன ஆத்திரம்! என்ன வேடிக்கை!

### பெண்கள் உரிமை

ஆண்களல்ல, பெண்களும் தலை நிமிர்ந்து நின்று தமது உரிமையை நிலைநாட்ட வாதாடி வண்மஞ் சாதித்தனர். களனிப்பகுதி அபேட்சகரான ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன என்பவர் காட்டிய வீரம் இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்புத் திறைச்சேரியில் வாக்குச் சீட்டுகள் வைக்கப்பட்ட அறையை இரவு முழுவதும் துப்பாக்கிப் பொலீஸாருடன் நின்று பாதுகாத்தனர். அரசினரின் பாதுகாப்புமுறையில் இவர்க்கு நம்பிக்கைகிடையாதுபோலும். கண் தூங்காமல் இரவு முழுவதும் மிக்க காதலுடன் பெட்டிகளைப் பாதுகாத்தும் அடுத்த நாள் ஆவலுடன் எதிர்பார்த்த வெற்றி கிட்டாது எட்டிப்போயது.

என்ன செய்தார் இப்பெண்மணி? அரசினரைத் திட்டினார். அரசாங்க உத்தியோகத்தர்களைத் தூஷித்தார். தேர்தல் ஸ்தானங்களில் தலைமை வகித்த உத்தியோகத்தரை மாபெருந் திருடரென்றார். ஏதோ தமக்குக் கிடைக்க வேண்டிய வாக்குச் சீட்டுகள் திருடப்பட்டன என்று எண்ணினாரோ? அல்லது திருட்டுத்தனமாகத் தமது எதிரிகள் தங்கள் வாக்குகளைப் பெருக்கிவிட்டனரென மனம் புழுங்கினாரோ தெரியவில்லை. ஒன்றுமில்லை. அரசாங்கத்தை முற்றாக எதிர்க்கும்படி பொது மக்களைத் தட்டி எழுப்பினர். புரட்சி எப்போது ஏற்படுமோ தெரியவில்லை.

(தொடரும்)

## புதிய நூல்கள்

(1) இலங்கைப் புலவர்கள் அணா. 8. (2) தமிழ்த்தொண்டர்கள் ரூ. 1. (3) இலக்கியப் பொழில் ரூ. 1 1/2. (4) விஞ்ஞானத் தொண்டர்கள் ரூ. 1. (5) சிலப்பதிகார நூல் நயம் ரூ. 2 1/4. (6) இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா ஆராய்ச்சி ரூ. 2. (7) கம்பர் அகராதி ரூ. 6. (8) தமிழ் இங்கிலிஷ் அகராதி ரூ. 15 (9) சிலப்பதிகார வாசகம் அ. 8. (10) தமிழ்நாட்டு நவமணிகள் ரூ. 1. (11) சிலப்பதிகாரக் கதை அ. 10. (12) விஞ்ஞானப் பெரியார் ரூ. 3 3/4. விரிவான விலைப்பட்டியல் இனாம்.

ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், மதராஸ் 17

[4622—iii]

கொழும்பில்
ஈழகேசரி
கிடைக்குமிடம் :
பேசிக் புக்ஸ்ரோல்[illegible]
99, சதாம் வீதி.
கோட்டை : : கொ[illegible]

# பெண்

ஆநந்தனுக்கும் திலகத்துக்கும் கல்யாணமாகி இரண்டு மாதங்கள் கூட ஆகியிருக்காது. ஆதர்ச தம்பதிகள் என்று சொல்வார்களே அந்தச் சொற்றொடருக்குப் பொருளாகவும் விளக்கம்போலவும் அவர்கள் வாழ்ந்தார்கள். 'கல்யாணமானதும் காதல் கருகிவிடுகிறது' என்று குறும்புத்தனமாகவோ அல்லது அர்த்தத்தோடோ எழுதும் இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் சிலர் வெட்கப்படும்படியாக அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. அக்கம் பக்கத்துப் பெண்கள் 'அவள் என்ன சொக்குப் பொடி போட்டாளோ?' என்றுகூடக் குசுகுசுத்தனர். இதனை அவர்கள் அறிந்தார்களோ என்னவோ அவர்கள் இன்பமாக வாழ்ந்தார்கள்.

அன்று...மத்தியானச் சாப்பாடாகிவிட்டது.

உண்ட மயக்கத்தில் ஆநந்தன் தன் கட்டிலிலிருந்த தலையணையில் முதுகைச் சாய்த்துக்கொண்டு கிடக்கிறான். கையிலே நித்திரையை வருவிப்பதற்காகவோ அல்லது தடுப்பதற்காகவோ ஒரு புத்தகம்.

திலகம் சமையலுக்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு வருகிறாள். அறைக்குள்ளே கிடந்த அடுத்த கட்டிலில் அவளும் படுத்திருக்கலாம். ஆனால் அவள் அதை விரும்பவில்லை.

அவன் நித்திரையாய் விடுவான் என்ற பயமோ என்னவோ அவள் கதிரையை எடுத்துப் போட்டுக்கொண்டு அவன்முன்னால் உட்காருகிறாள். ஏதாவது செய்யவேண்டும் என்பதற்காக அவள் கையில் ஒரு புடவைத்துண்டும் ஊசியும் நூலும். அவள் கண்களிலே அவனை வெற்றிகொண்ட ஒரு பெருமிதம் வெறியாட்டம் போட்டுக்கொண்டிருக்கிறது. அவள் தைத்துக்கொண்டிருக்கிறாள். இடையிடையே என்னென்னவோ கேட்டு அவன் வாசிப்பைத் தடுத்து, நித்திரையைக் கலைத்து...

நித்திரை மயக்கில் அவன் பேச்சுக் கொடுக்கத் தவறும்போது அப்பாடா அவள் படும்பாடு! காலம் ஊர்ந்துகொண்டேயிருக்கிறது. திலகம் தைத்துக்கொண்டிருக்கிறாள். ஆநந்தன் படித்துக்கொண்டிருக்கிறான்.

அப்போதுதான் கனகம் அறைக்குள்ளே வருகிறாள். அன்றைக்குத்தான் அவள் பட்டினத்திலிருந்து வந்திருக்கிறாள்.

கனகம், ஆநந்தனுக்கு மாமி மகள். ஒருகாலத்தில் அவள் தனக்கு மனைவியாகலாம் என்று ஆநந்தன் எண்ணியதுண்டு. கனகமும் எதிர்பார்த்ததுண்டு. ஆனால் இப்போது ஏதோ காரணத்தினால் கனகம் பிறந்த கிராமத்தையேவிட்டுப்போய்ப் பட்டினத்திற் படிக்கலானாள். 'நாணம், மடம், அச்சம் நாய்கட்கு வேண்டும்' என்று பாரதியாரின் கனவுப் பெண் சொன்னாளல்லவா? அந்தப் புதுமைப் பெண்ணின் பிரத்தியட்ச ரூபமாய் இருப்பாள் கனகம். தனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக வாயையும் உதடுகளையும் சதலக்கிரமமாக்கிக்கொண்டு 'அத்தான்' என்றழைக்கும்போது ஆநந்தனுக்கு அவள் தன்னை இன்னோர் முறை அப்படிக் கூப்பிடமாட்டாளா என்றிருக்கும். கனகத்துக்கும் ஆநந்தன்மேல் ஒரு பாசம். கனகம் அறைக்குள்ளே வருகிறாள். ஒருக்கணித்துச் சாத்தப்பட்டிருந்த கதவால் நுழையும்போது எதிரேயிருந்த திலகந்தான் அவள் கண்களிற் படக்கூடியதாயிருக்கிறது.

அத்தான் வீடு என்ற உரிமையோடு தடபுடலாக நுழைந்த கனகம் கட்டில் விளிம்பில் இருந்துகொண்டு திலகத்துடன் பேச்சுக் கொடுக்கிறாள். ஆநந்தன் படுத்திருப்பது அவளுக்குத் தெரியாது. சத்தங்கேட்ட ஆநந்தன் கையிற் பிடித்திருந்த புத்தகத்தை மார்பிற் கவிழ்த்து வைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்கிறான்.

ஒழுங்காக வாரிவிடப்பட்டுத் தலையில் ஒட்டி நெளிந்தோடும் கேசமும், பின்னல் முடிந்தவிடத்தில் வண்ணாத்திப் பூச்சியைப்போலத் தொத்திக்கொண்டிருந்த நீலநிற 'றிபனும்' அதற்குக்கீழ் விரிந்து பறந்துகொண்டிருந்த நீண்ட கூந்தலும், பேச்சுக் குரலும், அவள் கனகந்தான் என்பதை அவனுக்கு அறிவுறுத்துகின்றன.

ஒருகாலத்தில் அவளோடு பண்ணியகுறும்புத்தனத்தின்

**அ. வ. இராசரத்தினம்**

மெல்லிய நினைவுகள், அவள் படபடத்த வாயைக்கிளப்பி வேடிக்கை பார்க்க வேண்டுமென்ற ஆசையை அவன் மனதில் மூட்டுகின்றன. அவள் கூந்தலைக் கிள்ளிப்பிடித்து வெடுக்கென்று இழுக்கின்றான் ஆநந்தன்.

கனகம் தடாரென்று திரும்பிப் பார்க்கிறாள். ஆநந்தனும் பார்த்துச் சிரிக்கிறான். கனகமும் ஒருகணம் முறைத்துப் பார்த்துவிட்டுச் சிரிக்கிறாள். இருவருக்குமிடையில் குறும்புத்தனமான சம்வாதம் நீண்டுகொண்டேபோகின்றது. சிரிப்பும் கும்மாளமும் அறைச் சுவர்களில் மோதி எதிரொலிக்கின்றன.

எதிரே கதிரையிலிருந்து திலகம் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறாள். இத்தனை நேரமாக அவன் தன்மீதுகொண்டிருந்த அலட்சியம், அதனால் ஏற்பட்ட நிராசை, தன் முன்னிலையிலேயே அவன் கனகத்தோடு கொஞ்சுந்தாராளம், அதனால் ஏற்பட்ட பொறாமை எல்லாம் அவள் இதயத்தை முறுக்கிப் பிழிகின்றன. அவனை வெற்றிகொண்ட வெறி ஓடியிருந்த அவள் கண்களில் ஏமாற்றத்தின் அவநம்பிக்கையும், தோல்வியின் நமைச்சலும் கண்ணீரைப் பொழியவைக்கின்றன.

திலகம் எழுந்து வெளியே நடக்கிறாள். அறைக்குள்ளே சிரிப்பொலி கேட்டுக்கொண்டேயிருக்கின்றது. நிமிஷங்கள் கரைகின்றன. எதையோ உணர்ந்துகொண்டவன்போல ஆநந்தனும் எழுந்து வெளியே போகிறான்.

வீட்டுத் தாழ்வாரத்திற் திலகம் சேலைத் தலைப்பை முறுக்கிக்கொண்டு நிற்கிறாள். அவள் கன்னத்தில் கண்ணாடியில் விழுந்த மழைத்தாரையைப்போலக் கண்ணீர் கோடிழுத்துக்கொண்டு ஓடுகிறது.

ஆநந்தன் அவளை நெருங்குகிறான். "ஏன் அழுகிறாய்"?

" ... ... .... .... "

ஆநந்தன் விஷயத்தை விளங்கிக்கொண்டு "பைத்தியம் இதற்காகவா அழுகிறாய்?" என்கிறான்.

திலகம் பேசவேயில்லை. அவள் மௌனம் ஆநந்தனின் மன இரைச்சலுக்குப் பகைப்புலமாக நிற்கிறது.

ஆநந்தன் பெருமூச்சுவிட்டுக்கொண்டே மறுபடியும் அறைக்குள் போவதற்காகத் திரும்புகிறான். திலகம் தடாரென்று பாய்ந்து அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மிப் பொருமி அழுகிறாள்.

ஆம், பரத்தை வீட்டுக்குப் போகவிரும்பிய தொழுநோய் பிடித்த கணவனைத் தன் தலையாலேயே சுமந்து சென்றவளைக் கற்புக்கரசியென்று கையேந்தும் இந்த நாட்டில் அவள் அழாமல் வேறு என்ன செய்வாள்?

ஏனென்றால் அவள் பெண்!

# அமெரிக்க குழந்தைகள் தினம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

12. பாதுகாப்பு முறைகளைப்பற்றியும் போதனை.

13. உடல் வலியும் உள்ளத் துறுதியும் குன்றிய குழந்தை சமூகத்திற்கு ஒரு சுமையாகி விடக்கூடாது. அவ்வித குழந்தையும் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு அரசாங்கமே முயற்சி எடுக்க வேண்டும்.

14. சமூகத்துடன் ஒத்து வாழும் சுபாவமில்லாத ஒவ்வொரு குழந்தையும் சகஜமான வாழ்க்கை நடத்த வசதி செய்யவேண்டும்.

15. வாழ்க்கைத்தர உயர்வுடனும் ஸ்திரமான வருமானத்துடனும் இருக்கும் குடும்பத்தில் வளர ஒவ்வொரு குழந்தைகளுக்கும் உரிமை.

16. உடல், மனம் இவற்றின் வளர்ச்சி குன்றுமாறு செய்வதோ, விளையாட்டு, தோழமை, குதூகலம் இவற்றில் குறுக்கிடுவதோ ஆன வேலைகளில் குழந்தையை அமர்த்தக்கூடாது.

17. நகரத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு உள்ளது போலவே கிராமத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கும் பாடசாலை வசதியும் ஆரோக்கியத்திற்கு வசதியும் இருக்கவேண்டும். இந்நோக்கத்துடன் கிராமக் குடும்பங்களுக்குச் சமூகத்தில் வசதிகளும் உல்லாசப் பொழுதுபோக்கு, கலாச்சார வசதிகளும் அதிகப்படுத்தப்படவேண்டும்.

18. வீடு, பாடசாலை இவற்றில் கழிக்கும் நேரம் தவிர இதர நேரத்தில் குழந்தைகளின் பொழுது போக்கிற்காக இளைஞர் ஸ்தாபனங்களுக்கு ஊக்கமளித்தல்.

19. குழந்தையின் ஆரோக்கியம், கல்வி, சேமாபிவிருத்தி இவற்றிற்காக முறையாக நடத்தப்படும் நிலையங்கள், அவற்றில் பயிற்சிபெற்ற சுகாதார அதிகாரிகளும், தாதிப் பெண்களும், ஆராய்ச்சிக்கூட ஊழியர்களும் இருக்க வேண்டும். அந்த ஸ்தாபனங்கள் குழந்தைகளுக்கு விசேஷ உதவி புரியவும் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, சுரண்டல், ஒழுக்கம் தவறுதல் இவை சம்பந்தமாகப் பாதுகாப்பு அளிக்கவும் வேண்டும்.

பல நகரங்களிற் குழந்தை சுகாதார தினமானது குழந்தை சுகாதார வாரத்துடன் இணைக்கப்படுகிறது.

ஜனாதிபதி ட்ரூமன் ஒரு பிரகடனத்திற் கூறுவதாவது:

"குழந்தைகளின் சேமாபிவிருத்தியில் சிரத்தையுள்ள எல்லா ஸ்தாபனங்களும் குழந்தை ஆரோக்கிய தினத்தில் ஒன்றுபட்டு, சென்ற வருஷ சாதனைகளையும் புதுத் திட்டங்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

உலகில் குழந்தைகளின் நலத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் முதலாவது அரசினர் ஸ்தாபனம் யு. எஸ். குழந்தைகள் பகுதியே. வேறெந்நாட்டிலும் இவ்விதஒழுங்கு இல்லை.

"1992-ம் ஆண்டிற்குள் க்ஷயரோகம், இளம்பிள்ளை வாதம், கபவாதசுரம், வாதசுரம் முதலியவற்றைச் சமாளித்துவிடலாம். கடந்த நாற்பது ஆண்டுகளில் முயற்சித்ததுபோலவே நீடித்து முயற்சிப்போமானால் இந்த நூற்றாண்டின் இறுதியிற் பிறப்பவர்கள் உடல் வலியும் உள வலியும் பெற்றிருப்பார்கள்."

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

இரண்டாம் பாகம்

**உலக சரித்திரம்**

விலை ரூபாய் 3/-

திரு. எஸ். எவ். டி சில்வா அவர்கள்

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர (S. S. C.) வகுப்புக்கென எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கம்.

முதலாம் பாகம்

**இலங்கைச் சரித்திரம்**

ஏற்கெனவே வெளிவந்துவிட்டது

விலை ரூபாய் 3/-

...ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி

[...19—iii] 111, டாம் வீதி, கொழும்பு.

**யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி**

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்

ரூபா. 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப் பணம் கட்டுமுறை :

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு :

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள் :

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன் :

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

[4586]




**அன்பான மருமக்களே!**

வணக்கம், மனிதனுக்கு எல்லாவற்றிலும் முக்கியமானது தேகாரோக்கியம் என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் அநேக பிள்ளைகள் தேகாப்பியாசம், விளையாட்டு முதலியவற்றிற் பங்குபற்றாது புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருந்துவிடுகிறார்கள். படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது. பலமான உடம்பும் அவசியம். சிறுவர்கள் தேநீர் கோப்பி அதிகம் சாப்பிடுவது நல்லதல்ல எனச் சிலர் கருதுகிறார்கள். காலை எழுந்தவுடன் ஒரு கோப்பை வெந்நீர் நகச் சூட்டில் தினமும் சாப்பிட்டு வந்தால் தேகத்திற்கு மினுமினுப்பையும் கண்ணுக்கு ஒளியையும் கொடுக்குமென அறிஞர்கள் கூறுகின்றனர். தொடக்கத்தில் அப்படிச் செய்வது கஷ்டமாக இருந்தாலும் பழகப் பழகச் சரிவரும். எங்கே பார்ப்போம் உங்கள் ஆர்வத்தை.

கேசரிமாமா

## இலக்கியச் செல்வம்—20

# சிறுபஞ்சமூலம்

கே. எஸ். கிருஷ்ணன்

சிறுபஞ்சமூலம் என்ற நூலை இயற்றியவர் காரியாசான் என்ற புலவர். இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்.

இந் நூலில் 98 வெண்பாக்களே இப்போது உள்ளன. ஒவ்வொரு வெண்பாவிலும் ஐந்து உயரிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி என்ற ஐந்து மூலிகைகளின் வேர்களுக்குச் சிறு பஞ்சமூலம் என்று பெயர். இவ் வேர்கள் ஐந்தும் மக்களினுடைய உடல் நோயைப் போக்கித் தேகாரோக்கியத்தைக் கொடுக்கவல்லன. அவ்வாறே சிறு பஞ்சமூலம் என்ற நூலில் ஒவ்வொரு வெண்பாவிலும் ஐந்து பொருள்களும் மனதிலுள்ள மலங்களை நீக்கி மகிழ்ச்சியைத்தர வல்லவை.

இந் நூலிலுள்ள ஒவ்வொரு பாவும் படித்தறிந்து இன்புறத் தக்கது. உதாரணமாக இந்த வெண்பா இந்நூலிலுள்ள சிறந்த வெண்பாக்களுள் ஒன்று:-

'நன்புலத்து வையடக்கி,
நாளுமா டோபோற்றிப்
புன்புலத்தைச் செய்து,
எருப் போற்றியபின்
—இன்புலத்தின்
பண்கலப்பை யென்றிவை
பாற்படுப்பான் உழவோன்
நுண்கலப்பை
நாலோது வார்.'

இவ் வெண்பாவில் உழவருக்கு உரிய ஐந்தொழிலைத் தொகுத்துக் கூறியிருக்கிறார். அவை யாவன, விளைந்த வைக்கோலைக் காப்பாற்றிவைத்தல்; மாடுகளைப் பேணுதல்; நிலத்தைச் செய்காலாகத் திருத்தல்; நிலத்திற்கு எருப் போடுதல்; கலப்பையால் நிலத்தையுழுது பண்படுத்தல் என்ற ஐந்துமாம்.

இது போன்ற பல பாக்கள் இந்நூலில் உண்டு. அவைகளையெல்லாம் நீங்கள் படித்து இன்புறவேண்டும்.

## மிருகங்களும் பறவைகளும் 14

# கிளி



மே.523 நா. சோமசுந்தரன்

கிளி என்றதும் "பறந்துவாராய் பச்சைக்கிளியே" என்று பாடத்தொடங்கிவிடுவீர்கள்! கிளியைக் கண்டதும் ஒருவித களிப்பு உண்டாகின்றது. கிளியைப் பார்க்க, அதன் பேச்சைக் கேட்க, உளம் விரும்புவீர்கள். கிளி வானிற் பறந்து திரியும் பறவை. சந்தோஷமாகக் கூடிக் குலாவி வாழும். கிளி கூறும் மொழிகளை மதலைக் குழந்தைகளின் குதலைக்கு ஒப்பிடுவர். மான்விழி மங்கையரின் மொழியைப் புலவர்கள் கிளியின் குரலுக்கு ஒப்பிடுவர். குறமங்கை வள்ளி தினைப்புனத்திற் கிள்ளைகளை நோக்கிக் கற்களைக் கவண் மூலம் வீசினாள் எனப் படித்தோம். அவளின் பொழுது போக்கு அது. கவிகள் தீட்டிய புராணத்தில், காவியத்திற் கிளிகளென்பது இல்லாமலே போகாது!

கிளி யாழ்ப்பாணப்பகுதியில் அதிகமுண்டு. ஆனபடியால் எல்லோரும் கிளியைக் கண்டிருப்பீர்கள்.

கிளியை அநேக வீடுகளிற் கூடுகளில் அடைத்து வளர்க்கிறார்கள். இது பாபமென்றாலும் பாசத்தினால் வளர்க்கின்றார்கள். இப்பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. முருகன் - வள்ளி, காத்தவராயன் - ஆரியமாலா காலத்துக்கு முன்பிருந்தே வருகின்றது!

கிளி, தினை சாமை போன்ற சிறு தானியங்களையும் பழங்களையுமுண்ணும்!

பண்டை நாட்களிற் கிளியைப் பல விஷயங்களுக்கு உபயோகித்தார்கள். அரசர்கள் ஆயிரக்கணக்கில் வளர்த்தார்கள்! ஏன்? பகைவர்கள் வந்து நாட்டைச் சூழ்ந்து கொண்டால் நாட்டிற்கு வெளியே செல்ல முடியாது. நாட் செல்லச் செல்ல நாட்டினிலுள்ள சேமிப்பு உணவு முடிந்துவிடும். ஆகவே கிளிகள் மூலம் வெளியேயிருந்து நெற்கதிர், தினைக்கதிர் என்பன தருவிக்கலாம். செய்திகளனுப்பவும் கிளிகள் உபயோகப்பட்டிருக்க வேண்டும்.

**கிள்ளை விடு தூது** என்னும் நூலிற் கிளிகளைப் பற்றியதிகம் அறியலாம்.

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

## திரு. ஆர். பி. எஸ். ராஜசூரியா

**சிலாங்கூர் கௌரவம்**

சமீபத்தில் மே. த. சிலாங்கூர் சுல்தான் அவர்களாற் சமாதான நீதிபதியாக (ஜே. பி.) நியமிக்கப்பெற்ற கோலாலம்பூர் பிரபல வழக்கறிஞர் திரு. ஆர். பி. எஸ். இராஜசூரியா, மலாயா இலங்கையர் சம்மேளனத்தின் கோலாலம்பூர் கிளைஸ்தாபனத் தலைவராவர். இவர் பொதுவாக விளையாட்டுத்துறைகளில், விசேஷமாகக் கிரிக்கட் விளையாட்டில் தீவிர சிரத்தையெடுத்து வருபவர். மலாயா கிரிக்கெட் சங்கத்திற்கு இவர்தான் தலைவர். அத்துடன் ஆசிரியர்கள் ரக்பி சங்கத்திற்கு இவர் உபதலைவராகவும் இருந்துவருகிறார்.

திரு. இராஜசூரியா மூன்று முறை கோலாலம்பூர் நகரசபை ஆணையாளர்களில் ஒருவராகப் பதவிவகித்துள்ளார். மேலும் பல்வேறு நிர்வாக சபைகளிலும் சங்கங்களிலும் அங்கம்பெற்றுள்ளார்.

பெடரேசன் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. டபிள்யூ ஜி. ஹோஸ்டிங் தாம் ஓய்வுபெற்று விலகித் தாய்நாடு செல்லுமுன்னதாக திரு. இராஜசூரியாவைப் பற்றிப் பாராட்டுகையில், 'அவர் பெடரேஷனில் பிரபலமானதொரு வழக்கறிஞர்' எனக் குறிப்பிட்டார்.

சமீபத்தில் பிரசுரமான "இருபத்துவருட கால மலாயா நீதிஸ்தல விசாரணைகள்" என்ற புத்தகத்தின் ஆசிரியரும் இவரேயாவர்.

## கே. எஸ். கிருஷ்ணன் எம். ஏ.

வல்வெட்டித்துறைச் சிதம்பரா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் திரு. கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் கல்கத்தாபல்கலைக் கழகம் நடத்தியஎம். ஏ. பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

## மாமா பதில்

**மே.523 நா. சோமசுந்தரன்** தேர்தல் முடிந்தபடியால் நீர் ஊர் திரும்பியிருப்பீர் என நம்புகின்றேன். நீர் 'கிளி' பற்றி ஏற்கனவே எழுதிய கட்டுரையை பிரசுரித்துள்ளேன்.

**மே 621 பூ. ச. கந்தசுவாமி,** மாணவர் கடமையைப் பற்றி நீர் நன்கு அறிந்திருக்கின்றீர்.

**கி.600 செ. அச்சுதம்பிள்ளை** உமது கதையை வாசித்து உற்சாகமடைந்தேன்.

**மே.612 பொ. கனகலிங்கம்** சந்திரனைப்பற்றி நீர் விபரமாக எழுதியிருக்கலாம். குழந்தை நன்று.

**கி.615 க. நவரத்தினம்,** நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அன்பர்களுக்கும் இதனைப் போதிக்கவும்.

**மே.71 வி. கந்தவனம்,** சினிமாக்கதைகளின் சுருக்கம் போல எழுதியிருக்கின்றீர். பிரசுரிக்கவில்லை.

**மே.602 செ. கந்தசுவாமி,** மது மதியை மயக்கும் வஸ்து என்பதில் ஐயமில்லை. பதிவு இலக்கத்தைக் குறிப்பிடும்போது மேற்பிரிவோ கீழ்ப்பிரிவோ என்பதையும் எழுத வேண்டும்.

## பிறந்த தின வாழ்த்துக்கள்
## 8-6-52—14-6-52

கீ.69 க. நவமணி; மே.191 ந. பஞ்சாட்சரம்; கீ.337 அ. கபூர்; மே.356 ந. யோகசுந்தரம்; மே 374 இ. இராசரத்தினம்; கீ.382 க. சிவகாமிப்பிள்ளை; கீ. 464 பூ. கந்தசுவாமி; கீ. 466 ஜே. புஞ்சிநோனா; மே 471 மூ. சந்தனப் பிள்ளை.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக!

## சங்கீத கதாப் பிரசங்கம்

முல்லைத்தீவைச் சேர்ந்த குமாரபுரம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் சென்ற 31–5–52 சனிக்கிழமை இரவு கிருபானந்த வாரியார் அவர்களால் முருகன் திருவிளையாடல் என்னும் விஷயம்பற்றிச் சிறந்த பக்க வாத்தியங்களுடன் கதாப்பிரசங்கம் செய்யப்பட்டது.

## கூட்டுறவு வளர்ச்சி

**பச்சிலைப்பளியின் முன்மாதிரி**

"வட பகுதியில் எத்தனையோ பண்ட சாலைச் சமாசங்கள் இருந்தாலும் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வருடத்துக்குள் பதினெண்ணாயிரம் ரூபாய் சுத்த இலாபம் கண்டது இந்தப் பளைக் கூட்டுறவுச் சமாசமேயாகும். இதற்காக ஒத்துழைத்த எட்டுப் பண்டசாலைகளையும் பச்சிலைப்பளி மக்களின் பண்பாட்டையும் மிக மெச்சுகிறேன்" என்று சமீபத்தில் நடந்த பளைக் கூட்டுறவுச் சமாசத்தின் மூன்றாம் வருடாந்த விழாவுக்குத் தலைமைவகித்த உதவிப் பதிவு காரியஸ்தர் திரு. ஆர். வி. எஸ். குக். அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்.

அணுக்காய், கிளிகொச்சி, கண்டாவளை தொடங்கிக் கிளாலி எழுதுமட்டுவாள் வரையுமுள்ள முப்பத்தாறு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளாக அங்கே வந்திருந்த பச்சிலைப்பளிக் கூட்டுறவு வாலிபர்க்கு ஒரு கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்தை வடபகுதி மேற்பார்வைச் சபைக்காரியதரிசி திரு. அ. அருணம்பலம் அவர்கள் திறந்து வைத்துக் கூட்டுறவியக்கத்தின் மேனாட்டு வளர்ச்சியையும் இலங்கையின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டு விரிவுரை ஒன்று நிகழ்த்தினர். உப உதவிப் பதிவு காரியஸ்தர் திரு. வி. பொன்னுசுவாமி அவர்களும் பயிற்சிக்கழக வடபகுதியதிபர் திரு. எஸ். பொன்னையா அவர்களும் கூட்டுறவுப் பரிசோதகர்களும் பெருந்திரளான மக்களும் கூடிவந்து கூட்டுறவுத் தத்துவங்களைப்பற்றிக் கலந்துரையாடிப் பயனடைந்தனர். சமாசக் காரியதரிசி திரு. க. பே. முத்தையா நன்றியுரையும் நிறைவுரையும் கூறினர்.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிருவாகசபை ஒன்று அமைக்கப் பட்டது. தலைவராக திரு. பி. வாப்பிரகாசமும், காரியதரிசியாக திரு. க. பே. முத்தையாவும், தனாதிகாரியாக திரு. சேனாதிராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அரசினர் பாடசாலைகளில் நியமனம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்பினும் மறுக்கப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் சேவையிலிருந்த சில ஆங்கில ஆசிரியர்கள் சேவையிலிருந்துகொண்டே அரசினர் பாடசாலைகளில் நியமனம்பெற்றுள்ளனர். ஆங்கில ஆசிரியர்களுக்கு இந்த விதி எப்படி இல்லாதுபோயிற்று.

அரசினர் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாயிருப்பினும் அவர்கள் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளிற் சேவையிலிருப்பின் சேவையிலிருந்து விலகி உத்தியோகமற்ற ஆசிரியர்கள் இடாப்பில் பதிந்து நியமனம் பெறவேண்டியிருப்பதாற் சேவைக்காலத்தை இழப்பதோடு அரசினர்பாடசாலைகளில் நியமனம்பெறும் வரையும் வேதனத்தையும் இழக்க வேண்டியிருக்கிறது.

எனவே அரசினர் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்சி பெற்று உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் அரசினர் பாடசாலைகளில் நியமனம்பெற விரும்பின் அவர்களுக்கு நியமனம் கொடுக்கப்படவேண்டுமென த் தயவாய்க் கேட்கின்றேன்.

நவகலாமணி
நாவலப்பிட்டி

## கோட்டு விற்பனவு விளம்பரம்
## இல. 6718.

பூநகரி கறுக்காய்த்தீவு
**செல்லப்பா சின்னத்தம்பி**
வழக்காளி

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
**வேலுப்பிள்ளை சுந்தரம்பிள்ளை**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6718-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 25-ந் திகதி (25-6-52) புதன் கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**—முதல் வட்டி ரூபாய் 437-50-ம், இதில் ரூபாய் 250/ க்கு 14-6-50 திகதி தொடக்கம் 31-10-50 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீதவட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 134-87 சதம். இதில் ரூபாய் 60/ம். ரூபாய் 350/ இறுபட்டது.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூநகரிப்பகுதி பூநகரிக் கோவிற்பற்று கறுக்காய்த்தீவிலுள்ள "வெள்ளைச்சி தறை" நெற்பரப்பு 33-ம் குளி $10\frac{1}{2}$-ம். எல்லை கிழக்கு, ராசநாதி வயிரமுத்தவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு, வாய்க்கால். மேற்கு, விநாசித்தம்பி செல்லையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, நாகப்பர் செல்லப்பாவின் ஆதனம். இதடங்க[illegible] முற்பதிவு G 20/174.

சின்னத்தம்பி சங்கர[illegible]
Commissioner & [illegible]
Auctioneer
தெல்லிப்பழை, 17-5-5[illegible]

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

The
# EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, June 8, 1952 | No. 46

## ஆட்சிப்பீடத்தில் யூ. என். பி. கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர். இவர்களில் எவருக்காயினும் பொறுப்பான பதவி வழங்கப்படவில்லை. ஆனால் சேனநாயகா குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரிப்பதவிகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர்களில் ஒரு சிலர் வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவர்கள். இவர்கள் ஆற்றல் நிறைந்தவர்களோ என்பதைத் தானுங் காலந்தான் காட்ட வேண்டும்.

மந்திரி சபையில் பதினைந்து பேருக்கு இடமளிப்பதற்கான ஓர் ஏற்பாட்டைப் பிரதமர் ஒரு சிலருடன் ஆலோசித்துச் செய்திருந்தார் எனத் தெரிகின்றது. ஆனால் இதற்கு நிதி மந்திரி ஜயவர்த்தனவின் ஆசி பின்னர் கிடைக்கவில்லையாம். இன்னொரு விதமாகக்கூறுவதாயின் மந்திரிமாரின் தொகைகூட்டப்படுவதை 'லேக் ஹவுஸ்' பத்திரிகை முதலாளிமார் விரும்பவில்லை யென்பதேயாகும்.

மந்திரி சபையில் விஷயமறிந்தவர்கள் இடம் பெற்றாலென்ன, பெறாவிட்டாலென்ன யூ. என். பிக் கட்சி சிக்காராகச் சபையில் வீற்றிருக்கு மென்பது உண்மை. இப்பலத்தைக் கொண்டு இக்கட்சி தலைவீக்கமடைந்து தலை கால் தெரியாமல் நடந்துகொள்ளுமாயின் நாட்டு மக்களின் நம்பிக்கையை இழக்கும் என்பது திண்ணம்.

தேர்தலின் பின்னர் பிரதமர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில், "எங்கள் பணியை எனது அரசாங்கம் இறுமாப்புடன் தொடங்கமாட்டாது. மக்களின் ஊழியர்களெனக் கருதி மிகத் தாழ்மையுடன் கருமமாற்றும்" எனக் கூறியுள்ளார். இதனைப் புதிய மந்திரிசபை சாதனையிற் காட்டுமெனநாடு எதிர்பார்க்கின்றது.

இம்முறை எதிர்க்கட்சியின் பலம் மிகவுங் குன்றிவிட்டது. நெருப்புக் கக்கக்கூடிய தலைவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பது உண்மையேயாயினும் இவர்களை ஒன்று கூட்டும் பொதுவான கொள்கை எதுவுமில்லை. எதிர்க்கட்சியின் வேலை அரசாங்கத்தைச் சதா எதிர்ப்பதன்று. அன்றி எடுத்ததற்கெல்லாம் குற்றஞ் சாட்டுவதாலும் பயனில்லை. ஆக்க வேலைகளுக்கான யோசனை கூறி, அடுத்தமுறை வேறோர் கட்சி ஆட்சிப்பீடத்தில் அமைய வேண்டுமென்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்தி வைப்பதே எதிர்க்கட்சியினரின் முக்கிய பணியாக இருக்கவேண்டும்.

எதிர்க்கட்சியினரிற் பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரான திரு. பண்டாரநாயகா அவர்களையே தலைமைப் பதவியை ஏற்குமாறு வேண்டியுள்ளனர். ஆகவே திரு. பண்டாரநாயகா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகச் சபையில் விளங்குவார்கள். சென்றமுறை சமசமாஜக்கட்சித்தலைவர் டொக்டர் என். எம். பெரேரா இப்பதவியை வகித்தார்கள்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## வித்தியா விருத்திப் பணம்

சென்ற வருடம் நடைபெற்ற மத்திய பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு வித்தியா விருத்திப் பணம் அளிப்பதற்காய பரீட்சையில் தெல்லிப்பழை கிழக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையிலிருந்து தோற்றிய நான்கு மாணவரில் சுப்பையா—நீலாயதாட்சி முருகேசு—அரியரத்தினம் என்னும் இருவரும் அப்பணம் பெறுதற் குரியவர்களாகத் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

—கடிதம்.

## நெல்லு வெட்டிய கள்வர்

### சிறைத் தண்டனை பெற்றனர்

சென்ற சில மாதங்களுக்கு முன்னே நவாலிக் கிராமத்தில் இராக்காலத்தில் கள்வர் மூவர் நெல்லு வெட்டிக் கொண்டிருக்கும் பொழுது பொலீஸ் பகுதியும், கிராமவிதானையும், நவாலி வடக்குச் சேவா சங்கத்தின் தொண்டர் படையும் சேர்ந்து அவர்களை அகப்படுத்திக் கொண்டனர்- பொலீஸ் பகுதியார் கள்வர் மீது வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு விசாரிக்கப்பட்டு 17-5-52 ல் முதலாம் எதிரிக்கும் மூன்றாம் எதிரிக்கும் மூன்று மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாம் எதிரிக்கு ஆறு மாதம் பொலீஸ் பாதுகாவலும்நன்நடத்தையும் விதிக்கப் பட்டது.

## இந்தியர் இடைஞ்சல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பழைய பிரதிநிதிகள் சபையில் ஏழு இந்தியப் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகித்தனர். ஆனால் இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்தியர்களின் வாக்குரிமை பறிபோனபடியால் இந்தியர் ஒருவரும் தேர்தலிற் போட்டியிட முடியவில்லை. இந்த இடங்களில் இம்முறை சிங்களர் போட்டியிட்டு வெற்றியீட்டியிருக்கின்றனர்.

சிறுபான்மையாருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கெனச் சபையில் ஆறு ஸ்தானங்கள் உள. அதில் ஒரு ஸ்தானம் இம்முறை இலங்கை இந்தியரான திரு. எஸ். பி. வைத்தியலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட் டிருக்கின்றது. தேர்தல்மூலம்தவிர வேறுவழியிற் பிரதிநிதித்துவத்தை ஏற்பதில்லை யென்பது இலங்கை இந்தியக் காங்கிரஸின் கொள்கை. இது விஷயத்தில் அரசினர் இலங்கை இந்தியக் காங்கிரஸுடன் ஆலோசித்து முடிவு செய்வதே முறை. அப்படியின்றி இந்தியச் சமூகத்திடையே பிளவை உண்டாக்கக்கூடிய முறையில் அரசாங்கம் நடக்குமாயின் அது விரும்பத்தக்கதன்று.

இந்தியப் பிரதமர் நேருஜி, சென்னைப் பிரதமர் இராஜாஜி உட்பட வேறும் பல இந்தியத் தலைவர்கள் இந்தியா இலங்கை ஆகிய இருநாடுகளுக்குமிடையே நல்லிணக்கமும் ஒற்றுமையும் என்றுமே நிலவிவரவேண்டுமென்ற நம்பிக்கை பூண்டவர்கள். இலங்கைக்கும் இந்தியாவின் உதவி இருந்தேயாகவேண்டும். அமெரிக்காவையும், பிரிட்டனையும், பாகிஸ்தானையும் நம்பி இந்தியாவின் அன்பான அணைப்பை நீக்கிவிட இலங்கை எண்ணுமாயின் அது அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுவது போலவே முடியும். —இலங்கைத் தமிழன்

## அல்வாய் தெற்கு விதானையாருக்கு உபசரணை

இந்த உபசரணைக்கூட்டம் 30-5-52 வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார்கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. விதானையார் திரு. க. சிவப்பிரகாசம் அவர்கள் தமது குறிச்சியிலுள்ள சகல மக்களுக்கும் சமத்துவமான நீதிமுறையில் கடமையாற்றுவதைக் குறித்து இந்த உபசரணைக் கூட்டம் அவ்வூரிலுள்ள பள்ளர் சமூகத்தவரால நடாத்தப்பட்டதாகும்.

விதானையார் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். கோயில் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் க. மாணிக்கம், ச. சிவகுரு, த. செல்வராசா ஆசிரியர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

பின்னர் இ சகலை அவர்கள் அவ்வூரிலுள்ள சமூகத்தவரிடத்தது திரட்டிய பணத்தினால் செய்யப்பட்ட அறுநூறு ரூபாய் பெறுமதியான தங்கக் கழுத்துச் சங்கிலியை மாலையாகச் சூட்டி மகிழ்வித்தார். உபசரணைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக விதானையார் அவர்கள் கூறியதாவது: அல்வாய் தெற்கிலுள்ள பள்ளர் சமூகத்தவராகிய நீங்கள் கல்வியினாலும் சைவசமய ஒழுக்கத்தினாலும் சமூக சேவை உணர்ச்சியினாலும் மேம்பட்டு வருகின்றீர்கள் என்றும் அதனால் இப்பகுதியில் நீதிஸ்தலத்துக்குப் போகக் கூடிய குழப்பங்கள் எதுவும் உண்டாவதில்லை யென்றும் கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார். — கடிதம்

## தேர்தல் முடிபுகள்

சென்ற வாரத் தொடர்ச்சி

### ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு வடக்கு
45. ஸிறில் ஈ. எஸ். பெரேரா

களனி
46. ஜே. ஆர். ஜயவர்த்தன

கிரியெல்ல
47. ஏ. ஈ. பி. கிரியெல்ல

மிரிகம
48. ஜே. ஈ. அமரதுங்க

குருநாகல
49. டி. பி. வெலகெதர

இரத்தினபுரி
50. ஸிறில் ஈ. அற்றிகலே

வதுளை (2)
51. எஸ். ஏ. பீரிஸ்

அம்பலாங்கோடை — பலப்பிட்டி
52. ஜவான் டீ. சொய்சா

அம்பாந்தோட்டை
53. சாள்ஸ் எதிரிசூரிய

ஹக்மண
54. வி. ஏ. தர்மபால

### ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

பெலியத்த
7. டி. ஏ. ராஜபக்ச

பத்தகம
8. ஹென்றி அபயவிக்கிரம

தம்புளை
9. எச். பி. டன்னே

### சமசமாஜக் கட்சி

வதுளை (2)
4. ஜே. ஸி. ரி. கொத்தலாவல

தெஹியோவிற்ற
5. எட்மன்ட் சமரக்கொடி

பிங்கிரியா
6. ரி. பி. சுபசிங்க

உடுகம
7. டபிள்யூ. என். டீ. அல்விஸ்

காலி
8. டபிள்யூ. தஹநாயக

அம்பலாங்கொடை— பலப்பிட்டி (2)
9. வில்லியம் டீ. சில்வா

### கொம்யூனிஸ்ட் கட்சி

அவிசாவேலை
2. குசுமா குணவர்த்தன

அக்குரேச
3. டொறீன் விக்கிரமசிங்க

மாத்தறை
4. மகாநாம சமரவீர

### தொழிற் கட்சி

நாவலப்பிட்டி
1. ஆர். ஆர். ஜயதிலக

### குடியரசுக்கட்சி

மத்துகம
1. உவில்மற் ஏ. பெரேரா

### சுயேச்சை

வெலிமடை
11. எம். வி. வம்பாரபான

### நியமன அங்கத்தினர்

1. திரு. ஆர். ஷிங்கிள்டன் சால்மன்
2. டொக்டர் வி. ஆர். ஷொக்மன்
3. திரு. எஸ். பி. வைத்திலிங்கம்
4. திரு. ரொஸலின் கொக்
5. டுட்டெயின் நொல் தெனியஸ்.




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு ஜூன்மீ 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.